Postal Reg.No. GDP-39/2017-2019

بسم الله الرحمن الرحيم     نحمده ونصلّي على رسوله الكريم     وعلى عبده المسيح الموعود
وَلَقَدْ نَصَرَكُمُ اللّٰهُ بِبَدْرٍ وَأَنْتُمْ أَذِلَّةٌ

தொகுதி 2

வருடாந்திர சந்தா ரூபாய் 300/-

# பதர்

வார இதழ் - காதியான்

The Weekly BADAR Qadian TAMIL

இதழ் 26

ஆசிரியர் முஸ்ஸம்மில் அஹ்மது

துணை ஆசிரியர் ரஃபீக் அஹ்மது

4 ஷவ்வால் 1438 ஹிஜ்ரி கமரி     29 இஹ்ஸான் 1396 ஹிஜ்ரி ஷம்ஸி

29 ஜூன் 2017

## அஹ்மதிய்யா செய்திகள்

ஸய்யிதுனா ஹஸ்ரத் அமீருல் முஃமினீன் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் அய்யதஹுல்லாஹுத்தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ் அவர்கள் அல்லாஹ்வின் அருளால் நலமுடன் இருந்து வருகின்றார்கள். அல்ஹம்து –லில்லாஹ். ஜமாஅத் சகோதரர்கள் ஹுஸூர் அவர்களின் சிறந்த உடல் நலத்திற்காகவும், அவர்களின் நீண்ட ஆயுளுக்காகவும், அவர்களது உயர்வான நோக்கங்களில் வெற்றி கிடைப்பதற்காகவும், அவர்களது குறிப்பான பாதுகாப்பிற்காகவும், தொடர்ந்து துஆ செய்து வாருங்கள். அல்லாஹ் ஒவ்வொரு நொடியும் ஹுஸூர் அவர்களது பாதுகாவல–னாகவும் உதவியாளனாகவும் இருப்பானாக. மேலும் அவர்களுக்கு உதவி செய்வானாக! ஆமீன்

**கீழ் நோக்கிச் செல்கின்ற எலிகளைப்போல் ஆகாதீர்கள். மாறாக, வான்வெளியை தனக்காக விரும்பி உயரப் பறக்கும் புறாவைப்போல் ஆகுங்கள். நீங்கள் பைஅத் என்னும் உடன்படிக்கை மூலம் பாவமன்னிப்பு கோரிய பின்னரும் அப்பாவத்திலேயே நிலை கொள்ளாதீர்கள். பாம்பு தனது சட்டையைக் கழற்றி எறிந்து விட்ட பின்னரும் பாம்பாகவே இருப்பதுபோல் நீங்கள் ஆகாதீர்கள். நீங்கள் பரிசுத்தவான்களாக ஆவதற்கு முயற்சி செய்யுங்கள். மனிதன் தானாக பரிசுத்தமான பின்னரே பரிசுத்தத்தைப் பெறுகிறான்.**

## வாக்களிக்கப்பட்ட மஸீஹும் மஹ்தியுமான ஹஸ்ரத் அக்தஸ் மிர்ஸா குலாம் அஹ்மது காதியானி (அலை) அவர்களின் கூற்றுகளிலிருந்து…

இறைவனைத் தேடும் அடியார்களே ! உங்களை செவிகளை திறந்து கேளுங்கள். திடநம்பிக்கை போன்று சிறந்தது வேறொன்றுமில்லை. உங்களைப் பாவத்திலிருந்து விடுவிப்பதும் நீங்கள் நன்மை புரிவதற்கு உங்களுக்கு சக்தி அளிப்பதும் இறைவனின் உண்மையான நேசர்களாய் உங்களை ஆக்குவதும் திட நம்பிக்கையேயாகும். திட நம்பிக்கை இல்லாமல் பாவத்தை உங்களால் விட்டு விட முடியுமா ? திட நம்பிக்கை என்னும் ஒளி இல்லாமல் உங்களால் மன அமைதி அடைய முடியுமா ? திட நம்பிக்கை இல்லாமல் உங்களிடையே உண்மையான மாற்றத்தை உண்டாக்க முடியுமா ? திட நம்பிக்கை இல்லாமல் உண்மையான இன்பத்தை உங்களால் பெற முடியுமா ?

திட நம்பிக்கையில் இல்லாமல் நீங்கள் இருள் நிறைந்த வாழ்விலிருந்து மீட்சி பெற மாட்டீர்கள் என்பதையும் ரூஹுல் குதுஸ் என்னும் பரிசுத்த ஆவியை நீங்கள் அடைய மாட்டீர்கள் என்பதையும் நீங்கள் நினைவில் வையுங்கள். திட நம்பிக்கை உடையவர்களே பாக்கியவான்களாக இருக்கிறார்கள். ஏனெனில் அவர்களே இறைவனைக் காண்பார்கள். சந்தேகங்களிலிருந்தும் ஐயங்களிலிருந்தும் இரட்சிப்பு பெற்றவர்கள் அருளுக்குரியவர்கள். ஏனெனில் அவர்களே இரட்சிப்பு பெறுவார்கள். திட நம்பிக்கை என்னும் செல்வம் உங்களுக்கு அருளப்படும்போதுதான் நீங்கள் பாக்கியவான்களாவீர்கள். இதன் பின்னரே உங்களது பாவங்கள் அழிக்கப்படும்.

பாவம் திட நம்பிக்கை இவ்விரண்டும் ஒன்றோடு ஒன்று சேரக்கூடியவை அல்ல. ஒரு பொந்திற்குள் கொடிய நச்சுப் பாம்பு இருப்பதை கண்ட நீங்கள் அதற்கு உங்கள் கையை விடத் துணிவீர்களா ? ஒரு எரிமலையிலிருந்து எறி கற்கள் வந்து விழுந்து கொண்டிருக்கையில் அல்லது மின்சாரம் தாக்கிக் கொண்டிருக்கும் இடத்தில் அல்லது வெறி பிடித்த சிங்கம் தாக்கும் இடத்தில் அல்லது மனித வர்க்கத்தையே அழித்துக் கொண்டிருக்கிற பிளேக் என்னும் கொடிய நோய் காணப்படும் இடத்தில் நீங்கள் நின்று கொண்டிருப்பீர்களா ? இவ்வாறிருக்க பாம்பு மீதும் மின்சாரம் மீதும் சிங்கத்தின் மீதும் பிளேக் மீதும் இருக்கிற அதே நம்பிக்கையானது உங்களுக்கு உங்களைப் படைத்த இறைவனின் மீது இருக்குமேயானால் அவனுக்கு எதிராக அவனது கட்டளைகளை மீறித் தண்டனைக்குரிய வழியை நீங்கள் கடைபிடிப்பீர்கள் என்பதோ அல்லது அவனோடுள்ள சத்திய விசுவாசத்தின் தொடர்பை முறித்துக் கொள்வீர்கள் என்பதோ ஒருபோதும் ஆகக் கூடிய விஷயமல்ல.

நன்மை, நேர்மை ஆகியவற்றின் பக்கம் அழைக்கப்பட்ட மக்களே ! எப்போது உங்களுடைய இருதயங்கள் திட நம்பிக்கையால் நிரப்பப்படுமோ அப்போதே இறைவன் மீதுள்ள கவர்ச்சியும் உங்களிடையே தோன்றும். அப்போதே பாவத்தின் அறுவறுப்பான கறையிலிருந்து நீங்கள் தூய்மைப்-படுத்தப்படுவீர்கள் என்பதை உறுதியாக நம்புங்கள். ஒருவேளை நீங்கள் உங்களுக்குத் திட நம்பிக்கை இருப்பதாக கூறிக் கொள்ளலாம். ஆனால் அவ்வாறு கூறுவதில் உங்களுக்கு ஏமாற்றம் ஏற்பட்டுள்ளது என்பதை நினைவில் கொள்ள வேண்டும். திட நம்பிக்கை உங்களுக்கு ஒருபோதும் உண்டாகவில்லை. ஏனெனில் அதைச் சார்ந்த அவசியமான விஷயங்களை நீங்கள் பெறவில்லை. இதற்குக் காரணம் நீங்கள் பாவத்திலிருந்து விலகாதிருப்பதேயாகும். நீங்கள் உங்கள் பாதங்களை எவ்வாறு முன்னால் எடுத்து வைக்க வேண்டுமோ அவ்வாறு எடுத்து வைக்கவில்லை. நீங்கள் எவ்வாறு பயப்பட வேண்டுமோ அவ்வாறு பயப்படவில்லை. நீங்களே சற்று சிந்தித்துப் பாருங்கள். இந்த பொந்திற்குள் பாம்பு இருப்பதாக திட நம்பிக்கை கொண்ட ஒருவன் அப்பொந்திற்குள் கையை விடுவானா ? தனது உணவில் விஷம் கலந்திருப்பதாக திட நம்பிக்கை கொண்ட ஒருவன் அதனை உண்ணுவானா ? ஒரு புதரில் ஆயிரம் இரத்த வெறி பிடித்த சிங்கங்கள் இருப்பதை உறுதியாக அறிகின்ற ஒருவன் தன்னைப் பேணாமலும் கவனமின்மையாலும் அப்புதரின் பக்கம் காலெடுத்து வைக்கத் துணிவானா ? ஆகவே உங்களுக்கு இறைவன் மீதும், தீர்ப்பு அளிக்கப்படும் நாள் மீதும் திட நம்பிக்கை இருக்குமானால் உங்களது கரங்களும், உங்கள் செவிகளும், உங்களது கண்களும் பாவங்கள் செய்ய எங்ஙனம் தைரியம் கொள்ளத் துணியும் ?

பாவமானது திட நம்பிக்கையை வெல்ல முடியாது. உங்களை எரித்துச் சாம்பலாக்கக் கூடிய நெருப்பை நீங்கள் காணும்போது அதில் நீங்கள் எவ்வாறு விழத்துணிவீர்கள் ? திட நம்பிக்கையின் சுவர்கள் வானம் வரை உயரத்தோங்கியிருக்கின்றன. ஷைத்தானால் அச்சுவர்கள் மீது ஏற முடியாது. பரிசுத்தமடைந்த ஒவ்வொருவரும் திட நம்பிக்கையினால்தான் பரிசுத்தம் அடைந்தனர். திட நம்பிக்கையானது துயரத்தை சமாளிப்பதற்கான சக்தியை அளிக்கிறது. அது எத்தகையது என்றால் ஒரு அரசனை சிம்மாசனத்திலிருந்து அகற்றி ஒரு பிச்சைக்காரனின் ஆடையை அணியச் செய்கிறது. திட நம்பிக்கையானது ஒவ்வொரு துன்பத்தையும் எளிதாக்குகிறது. திட நம்பிக்கையானது உங்கள் இறைவனை உங்களுக்குக் காட்டிக் கொடுக்கிறது. ஒவ்வொரு பாவ நிவர்த்திக் கொள்கையும் பொய்யானதாகும். ஃபித்யா என்னும் ஒவ்வொரு ஈடுசெய்தலும் பொய்யானதேயாகும். ஒவ்வொரு தூய்மையும் திட நம்பிக்கையின் வழியாகவே உண்டாகின்றது. உங்களை பாவத்திலிருந்து விடுவிப்பதும், உங்களை இறைவன் வரை எடுத்துச் செல்வதும், உண்மையிலும் உறுதியிலும் மலக்குகளை விட உங்களை

(தொடர்ச்சி கடைசிப் பக்கம்...)

பிரிண்டர் மற்றும் பப்ளிஷரான ஜமீல் அஹ்மது நாஸிர் அவர்கள் காதியானிலுள்ள ஃபஸ்லே உமர் அச்சகத்தில் அச்சிட்டு காதியானிலுள்ள பதர் பத்திரிகை அலுவலகம் மூலம் இதனை வெளியிட்டுள்ளார்.
Proprieter Nigran Badar Board Qadian

# ஜுமுஆ பேருரை

மற்ற உலக மக்கள் நபிமார்களின் வரலாற்றைப் படிக்கின்றனர் அல்லது கேட்கின்றனர் அல்லது மற்ற முஸ்லிம்கள் நபிமார்களின் வரலாற்றை திருக்குர்ஆனில் படிக்கின்றனர். ஆரம்ப கால முஸ்லிம்களுக்கு நடந்த சம்பவங்கள் அல்லது அவர்களுக்கு, அநீதியிழைக்கப்பட்ட விஷயங்களைப் படிக்கின்றனர் அல்லது தமது ஆலிம்களிடமிருந்து கேட்கின்றனர். ஆனால் அஹ்மதி முஸ்லிம்கள் எப்படிப்பட்டவர்கள் என்றால், அவர்கள் முஹம்மதிய மஸீஹை நம்பியதன் காரணமாக ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுடைய உண்மைப் பேரன்பரை ஏற்றுக் கொண்டதன் காரணமாக இஸ்லாத்தின் மறுமலர்ச்சிக்காக வந்த அல்லாஹ்வால் தேர்ந்தெடுக்கப்பட்டவர் மீது ஈமான் கொண்டதன் காரணமாக செயல் ரீதியாக அவர்கள் இந்நிலையைக் கடக்கின்றனர். மற்றவர்களுக்கு அதுவோ கடந்த கால மார்க்கச் சம்பவங்களாக மட்டுமே இருக்கின்றன.

நாம் அத்தகைய மக்களாவோம். நாம் ஹஸ்ரத் மஸீஹ் மவ்ஊது (அலை) அவர்களை ஏற்றுக் கொண்டுள்ளோம். உலகியல் சோதனைகள் மற்றும் எதிரிகளின் பகைமையினால் நாம் பொறுமையைக் கைவிடுபவர்களும் அல்ல அல்லது நமது ஈமானிலிருந்து பின்வாங்குபவர்களும் அல்ல. நமது துக்கங்களுக்கு ஆறுதல் அல்லாஹ்விடம் மட்டுமே உள்ளது என்பதை நாம் புரிந்தவர்களாவோம். உலகியல்வாதிகளுக்கு முன்னால் குனியாமல் எல்லா ஆற்றல்களுக்கும் எஜமானனாக இருக்கின்ற இறைவனுக்கு முன்பு மட்டுமே குனிய வேண்டும். அவனே நமது பொறுமை மற்றும் துஆவினால் பிரச்சனைகளிலிருந்து நமக்கு ஈடேற்றத்தை தருவான் - இன்ஷா அல்லாஹ்.

**பொறுமையை கடைபிடிக்கின்ற மற்றும் அல்லாஹ்வின் முன்பு குனிகின்ற நம்பிக்கை கொண்டவருக்கு இறைவன் புறமிருந்து தொடர்ந்து நற்செய்திகள் கிடைக்கின்றன.**

**திருக்குர்அன், நபிமொழி மற்றும் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் கட்டளைகளின் ஒளியில் எதிர்ப்புகள் மற்றும் அநீதியிழைக்கப்படுதல் ஆகியவற்றிற்கு எதிரில் பொறுமையை கடைபிடிக்குமாறும் துஆக்கள் செய்யுமாறும் வலியுறுத்திக் கூறப்பட்டுள்ள கட்டளைகளை ஹுஸூர் அய்யதஹுல்லாஹுத்தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ் அவர்கள் எடுத்துக் கூறினார்கள்.**

இக்காலத்தில் அஹ்மதிய்யா ஜமாஅத்தின் மக்கள் மீது பல்வேறு நாடுகளில் கடுமை, துன்பம் மற்றும் தொல்லைகள் ஏற்படுகின்றன. இதன் மீது நமது பணியாவது அல்லாஹ்விடம் பொறுமை மற்றும் துஆவுடன் உதவி கேட்டவாறு அவன் முன்பு குனிய வேண்டும் என்பதாகும். அவனே மறுப்பின் தலைவர்களைப் பிடித்து அவர்களிடமிருந்து நம்மை காப்பாற்றுவதற்கும், அவர்களது சூழ்ச்சிகள் மற்றும் திட்டங்களிலிருந்து நம்மை காப்பாற்றுவதற்கும் எல்லாவற்றையும் விட அதிகமாக சக்தியுள்ளவன் ஆவான். ஜமாஅத்தின் வரலாற்றிலிருந்து இதனையே நாம் பார்த்து வருகிறோம். எதிரிகள் தமது எல்லா வகையான ஆற்றல்களையும், வசதிகளையும் கொண்டிருந்தும் தோல்வியையே அடைந்தனர். ஜமாஅத்தின் பாதங்கள் முன்னோக்கியே செல்கின்றன.

ஆஸாத் காஷ்மீரில் தற்போது பாகிஸ்தானின் மவ்லவியின் தாக்கத்தின் கீழ் அங்குள்ள அரசியல்வாதிகள், அஹ்மதிகளை முஸ்லிம் அல்லாதவர்களாகக் கூறுவதற்காக காஷ்மீர் அசெம்ப்ளியின் சட்ட முன் வடிவை எடுத்து வைக்கின்றனர். ஏன் முன் வைத்துள்ளனர்? எவ்வாறிருப்பினும் இவர்கள் என்ன செய்ய விரும்புகிறார்களோ செய்யட்டும். பாகிஸ்தானில் அசெம்ப்ளியில் அஹ்மதிகளை முஸ்லிம் அல்லாதவர் என்று கூறி என்ன பெற்று விட்டார்கள்? ஜமாஅத்தின் முன்னேற்றம் அதனால் தடைபட்டதா? அல்லாஹ்வின் அருளால் ஜமாஅத் புதிய புதிய வெற்றிகளைப் பெற்றுக் கொண்டே செல்கிறது. ஆனால் ஜமாஅத் அன்பர்கள் நினைவில் கொள்ள வேண்டும். பொறுமையுடன் அல்லாஹ்வின் உதவியைப் பெற துஆ செய்வது மற்றும் அவனுக்கு முன் குனிவது, தமது தொழுகை மற்றும் இறைவணக்கங்களைப் பாதுகாப்பது ஆகியவை ஒவ்வொரு அஹ்மதியின் கடமையாகும். இதுவே நம்மை அல்லாஹ்வின் அருளுக்கு மேலும் வாரிசாக்கும்.

அல்ஜீரியா, பங்களாதேஷ், இந்தோனேஷியா மற்றும் அரபு நாடுகளில் அஹ்மதிய்யத்திற்கு இருந்து வருகின்ற எதிர்ப்பு பற்றி ஹுஸூர் அவர்கள் எடுத்துக் கூறினார்கள். கடந்த சில நாட்களுக்கு முன்னதாக அங்குள்ள நமது பள்ளிவாயிலின் மீது மவ்லவிகள் தாக்குதல் நடத்தினர். அப்போது நமது முரப்பியை கடுமையான முறையில் கத்தியால் குத்தி அவர்களை படுகாயப்படுத்தி விட்டார்கள்.

சில அஹ்மதிகள் தொடர்பாக தப்லீகின் போது எதிரிகளிடம் அவர்கள் கடுமையான சொற்களைப் பயன்படுத்துவதாக எனக்கு புகார் வந்திருக்கின்றது. இது உண்மை என்றால் அப்படிப்பட்டவர்கள் தப்லீக் செய்யாமல் இருப்பதே சிறந்ததாகும். இந்த தப்லீக் அவர்களுக்கு அல்லாஹ்வின் நெருக்கத்தைப் பெற்றுத் தருவதற்குப் பதில் அல்லாஹ்வின் கோபத்தைப் பெறுவதற்குக் காரணமானதாக ஆகி விடும். சமூக ஊடகங்களில் சில அஹ்மதிகள் கோபப்பட்டு தவறான முறையில் கடுமையான முறையில் இவர்களுக்கு பதில் தருகிறார்கள் என்றால் அவர்கள் தவறு செய்கிறார்கள். இதனால் ஒரு பாவம் அல்ல. புதிய தலைமுறைகளையும் கூட அஹ்மதிய்யத்தை விட்டு விலக்குகிற பாவத்தையும் அவர்கள் செய்கின்றனர். நம்மிடம் ஆதாரம் இல்லைபோலும். அதனால்தான் கடுமை காட்டுகிறார்கள் என்று நமது இளைஞர்கள் நினைக்கிறார்கள். ஆனால் அது தவறாகும். அத்தகையவர்கள் உடனே தமது நடவடிக்கைகளை மாற்ற வேண்டியது அவசியமாகும்.

இந்தியாவில் கேரளாவிலுள்ள பயங்காடி ஜமாஅத்தைச் சார்ந்த மதிப்பிற்குரிய பீபீ நாஸிமுத்தீன் சாஹிப் அவர்கள் வஃபாத் ஆகி விட்டார்கள். மர்ஹூம் பற்றிய நன்மைகள் எடுத்துக் கூறப்பட்டு அன்னாருக்காக ஜனாஸா காயிப் தொழுகையும் நிறைவேற்றப்பட்டது.

**சய்யிதுனா அமீருல் முஃமினீன் ஹஸ்ரத் மிர்ஸா மஸ்ரூர் அஹ்மது ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ்**
(அய்யதஹுல்லாஹுத்தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்) அவர்கள் **இலண்டன் மார்டனிலுள்ள பைத்துல் ஃபுதூஹ் பள்ளிவாயிலில்**
**12 மே 2017** அதாவது ஹிஜ்ரி ஷம்ஸி 1395 -ஆம் ஆண்டு **ஹிஜ்ரத்** மாதம் **12 -ஆம் தேதி** ஆற்றிய **ஜுமுஆ பேருரை**

أَشْهَدُ أَنْ لَّا إِلٰهَ إِلَّا اللّٰهُ وَحْدَهٗ لَا شَرِيكَ لَهٗ وَأَشْهَدُ أَنَّ مُحَمَّدًا عَبْدُهٗ وَرَسُوْلُهٗ
أَمَّا بَعْدُ فَأَعُوْذُ بِاللّٰهِ مِنَ الشَّيْطٰنِ الرَّجِيْمِ - بِسْمِ اللّٰهِ الرَّحْمٰنِ الرَّحِيْمِ
اَلْحَمْدُ لِلّٰهِ رَبِّ الْعَالَمِيْنَ. الرَّحْمٰنِ الرَّحِيْمِ. مٰلِكِ يَوْمِ الدِّيْنِ. إِيَّاكَ نَعْبُدُ
وَ إِيَّاكَ نَسْتَعِيْنُ. اِهْدِنَا الصِّرَاطَ الْمُسْتَقِيْمَ. صِرَاطَ الَّذِيْنَ اَنْعَمْتَ عَلَيْهِمْ
غَيْرِ الْمَغْضُوْبِ عَلَيْهِمْ وَلَا الضَّآلِّيْنَ.

**يٰٓاَيُّهَا الَّذِيْنَ اٰمَنُوا اسْتَعِيْنُوْا بِالصَّبْرِ وَالصَّلٰوةِ. اِنَّ اللّٰهَ مَعَ الصّٰبِرِيْنَ**

நம்பிக்கை கொண்டவர்களே! பொறுமை மற்றும் தொழுகை மூலமாக அல்லாஹ்விடம் உதவி கேளுங்கள். நிச்சயமாக அல்லாஹ் பொறுமையாளர்–களுடன் இருக்கின்றான். (2:154)

மனித வாழ்வில் பல்வேறு பிரச்சனைகளை அவன் எதிர்கொள்ள வேண்டியிருக்கிறது. சொந்த வாழ்க்கையில் பல்வேறு உலகியல் பிரச்சனைகளை மனிதன் கடந்து செல்கின்றான். பொறுமையுடன் இருப்பதைத் தவிர வேறு வழியில்லாத பிரச்சனைகள் வருகின்றன. பொருள், சந்ததிகள் மற்றும் உலகியல் பொருள்களில் நஷ்டம் ஏற்படுகிறது. உலகவாதி ஒருவர் அழுது துடித்து அந்த துன்பத்தைச் சகித்துக் கொள்கிறார். பெரும்பாலாரால் அதனை சகித்துக் கொள்ள முடிவதில்லை. உலகவாதிகள் சகித்துக் கொள்ளும்போது கூட எப்படி பொறுத்துக் கொள்கிறார் என்றால் பல மறுப்பின் சொற்கள் அல்லாஹ்வின் மீது புகார் கூறும் விதத்தில் அவரது வாயிலிருந்து வந்து விடுகிறது அல்லது சிலர் இவ்வாறும் இருக்கின்றனர். உலக நஷ்டங்களைச் சகித்துக் கொள்ள முடியாமல் சிலவேளை மூளை சீர்கெட்டு விடுகிறது.

ஆனால், அல்லாஹ்வின் சில அடியார்கள் இருக்கின்றனர். அவர்களுக்க உயிர், பொருளின் நஷ்டத்தைச் சந்திக்க நேர்ந்தாலோ அல்லது மன வேதனைக்குரிய விஷயத்தைச் சந்திக்க நேரும் போதோ அல்லது உலகியல் வேதனைகளை, அடி உதையின் வடிவில் சந்திக்க நேர்ந்தாலும் இவை அனைத்தையும் அவர்கள் பொறுப்புடன் சகித்துக் கொள்கின்றனர். அல்லாஹ்வின் கட்டளையை ஏற்றுக் கொண்டவாறு அல்லாஹ்வால் அனுப்பப்பட்ட நபி அல்லது தேர்ந்தெடுக்கப்பட்ட அடியாரை ஈமான்

கொள்கின்ற காரணத்தால் வேறு வார்த்தைகளில் கூறுவதாயின், அவர்களுக்கு ஏற்படுகின்ற உலகியல் பொருள் நஷ்டங்களும் கூட இறைவனுக்காக ஏற்படுகின்றன. இறைவனுக்காக உயிர் நஷ்டமும் ஏற்படுகிறது.

ஆனால் இந்த அனைத்து நஷ்டங்களையும் எந்த முறையீடுமின்றி அவர்கள் கடந்து செல்கின்றனர். ஆனால் அல்லாஹ்விடம் கண்டிப்பாக துஆ செய்கின்றனர். அல்லாஹ்வே! உன்னால் அனுப்பப்பட்டவரை நம்பியதன் காரணமாக மட்டுமே இவை அனைத்தும் எம்மீது செய்யப்படுகின்றது. எமது பொறுமையின் சக்தியை அதிகப்படுத்துவாயாக. நீயே எங்களுக்கு உதவிக்கு வருவாயாக. இந்த அநீதியாளர்களின் அநீதியிலிருந்து எம்மைக் காப்பாற்றுவாயாக. உனக்காக இந்த சோதனையை நாங்கள் கடக்கின்றோம். இதில் எமது பாதத்தை உறுதிப்படுத்துவாயாக என்று துஆ செய்கின்றனர். மற்ற உலக மக்கள் நபிமார்களின் வரலாற்றைப் படிக்கின்றனர் அல்லது கேட்கின்றனர் அல்லது மற்ற முஸ்லிம்கள் நபிமார்களின் வரலாற்றை திருக்குர்ஆனில் படிக்கின்றனர். ஆரம்ப கால முஸ்லிம்களுக்கு நடந்த சம்பவங்கள் அல்லது அநீதியிழைக்கப்பட்ட விஷயங்களைப் படிக்கின்றனர் அல்லது தமது ஆலிம்களிடமிருந்து கேட்கின்றனர்.

ஆனால், அஹ்மதி முஸ்லிம்கள் எப்படிப்பட்டவர்கள் என்றால், அவர்கள் முஹம்மதிய மஸீஹை நம்பியதன் காரணமாக ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுடைய உண்மைப் பேரன்பரை ஏற்றுக் கொண்டதன் காரணமாக இஸ்லாத்தின் மறுமலர்ச்சிக்காக வந்த அல்லாஹ்வால் தேர்ந்தெடுக்கப்பட்டவர் மீது ஈமான் கொண்டதன் காரணமாக செயல்ரீதியாக அவர்கள் இந்நிலையைக் கடக்கின்றனர். மற்றவர்களுக்கு அதுவோ கடந்த கால மார்க்கச் சம்பவங்களாக மட்டுமே இருக்கின்றன. இன்னும் சில பிரிவினர் கூறலாம். எங்களுக்கும்தான் மார்க்கத்தின் காரணமாக எதிர்ப்பை எதிர்கொள்ள நேரிடுகிறது என்று சில பிரிவினர் கூறலாம். ஆனால் இவர்கள் அனைவரும் இந்த மாற்றுக் கருத்துடையோர் எதிரிகளிடமிருந்து சந்தர்ப்பம் கிடைக்கும் போது அதேபோன்று தாமும் அநீதியிழைத்து அதற்கு பழிவாங்கியும் விடுகின்றனர்.

ஆனால், அஹ்மதிகள் மட்டுமே நம்பிக்கையாளர்களின் முன்மாதிரியைக் காட்டியவாறு, சட்டத்தைக் கையில் எடுக்காமல் அநீதிகளைப் பொறுத்துக் கொண்டவாறு அல்லாஹ்வின் முன்பு குனிகின்றனர். அவனிடம் உதவி கேட்டுகின்றனர். இந்த மிகப்பெரிய வித்தியாசம் அஹ்மதி முஸ்லிம்களுக்கும் பிற முஸ்லிம்களுக்கும் இடையில் இருக்கின்றது. நாம் அத்தகைய மக்களாவோம். ஏனெனில் நாம் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களை ஏற்றுக் கொண்டுள்ளோம். உலகியல் சோதனைகள் மற்றும் எதிரிகளின் பகைமையினால் நாம் பொறுமையைக் கைவிடுபவர்களும் அல்ல அல்லது நமது ஈமானில் இருந்து பின்வாங்குபவர்களும் அல்ல. நமது துக்கங்களுக்கு ஆறுதல் அல்லாஹ்விடம் மட்டுமே உள்ளது என்பதை நாம் புரிந்தவர்களாவோம். உலகியல்வாதிகளுக்கு முன்னால் குனியாமல் எல்லா ஆற்றல்களுக்கும் எஜமானனாக இருக்கின்ற இறைவனுக்கு முன்பு மட்டுமே குனிய வேண்டும். அவனே நமது பொறுமை மற்றும் துஆவினால் பிரச்சனைகளிலிருந்து நமக்கு ஈடேற்றத்தை தருவான் – இன்ஷா அல்லாஹ். களங்கமற்ற முறையில் அவன் முன்பு எப்போதும் குனிபவர்களை வெறும் கையுடன் அவன் திரும்ப அனுப்ப மாட்டான். அவனுக்காகவும் அவனால் நிலைநாட்டப்பட்ட ஜமாஅத்திற்காகவும் தியாகம் செய்பவர்களுக்கு அவன் கண்டிப்பாக நற்கூலி வழங்குகின்றான். நாம் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுடைய இந்த வழிகாட்டலை செயல்படுத்துபவர்கள் அல்லது புரிந்து கொள்பவர்கள் ஆவோம்.

அன்னார் கூறினார்கள்: நம்பிக்கை கொண்டவரின் விவகாரங்கள் வினோதமானது. அவரது எல்லா விவகாரங்களும் நன்மையை உள்ளடக்கியதாகும். இந்த அந்தஸ்து நம்பிக்கை கொண்டவருகு மட்டுமே உரியதாகும். அவருக்கு ஒரு மகிழ்ச்சி வந்தால் அதற்காக அவர் நன்றி செலுத்துகிறார்; அல்ஹம்துலில்லாஹ் கூறுகிறார். அல்லாஹ்வின் முன்பு ஸஜ்தா செய்கிறார். இந்த விஷயம் அவரது நன்மைக்குக் காரணமாக இருக்கின்றது. அவருக்கு ஏதாவது கஷ்டம் நேர்ந்தால் பொறுமை செய்கிறார். அதுவும் கூட அவரது நன்மைக்குக் காரணமாக அமைகின்றது. (சஹீஹ் முஸ்லிம் கிதாபுஸ்ஸுஹது வர்ரிகாயிகி. பாபுல் மு.ஃமினு அம்ருஹூ குல்லுஹூ ஹைரா ஹதீஸ் 7500) அல்லாஹ்வின் வழியில் பெரும் பெரும் கஷ்டம் வருவது, அந்த அடியாருக்கு பொறுமை மற்றும் துஆவினால் நன்மைக்குக் காரணமாக ஆக்குகிறது. ஆனால் அல்லாஹ் தமது அடியாருக்காக எத்தகைய அருள் செய்யக் கூடியவனாக இருக்கின்றான் என்றால் அவருக்கு சின்னச் சின்ன கஷ்டம் வந்தாலும் அதற்காகக் கூட அவன் கூலி வழங்காமல் விடுவதில்லை.

இதனை விளக்கியவாறு ஒரு சந்தர்ப்பத்தில் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறினார்கள்: முஸ்லிம்களுக்கு எந்தவொரு அசதி, நோய், நிம்மதியின்மை, துன்பம், கவலை வந்தடைந்தாலும் எந்த அளவுக்கு எனில் அவருக்கு ஒரு முள் குத்தினாலும் அதற்குப் பதிலாகக் கூட அவரது சில தவறுகளை அல்லாஹ் மன்னித்து விடுகிறான். (சஹீஹ் புகாரி கிதாபுல் மர்ழி பாபு மாஜாஅ ஃபீ கஃப்பாரது ஃபர்லுன் ஹதீஸ் 5641) ஆகவே இதுவே நமது கருணை உடைய இறைவனாவான். அவன் ஒரு முஃமினுக்கு சிறு சிறு காரியங்களுக்காகக் கூட அருள்புரிகிறான். ஒரு பொறுமையாளரான இறைவன் முன் குனிகின்ற ஒரு முஃமினுக்கு அல்லாஹ்விடமிருந்து நற்செய்தியும் உள்ளது.

பிறகு இன்னொரு சந்தர்ப்பத்தில் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் அல்லாஹ்வின் நடைமுறையைப் பற்றி கூறுகின்றார்கள்: அல்லாஹ்வின் வழியில் சிந்தப்படுகின்ற இரத்தம் இரவின் வேளையில் நஃபில் தொழுதவாறு இறையச்சத்தின் காரணமாக வடிந்த கண்ணீர் ஆகியவற்றை விட எந்த துளியும் அல்லாஹ்வுக்குப் பிடித்தமானதில்லை. மனிதன் பொறுமை செய்தவாறு குடித்த கவலையின் மிடறை விடவும் பிரியமான மிடறுமில்லை. அதாவது கவலையின் நிலையில் மனிதன் அல்லாஹ்வுக்காக பொறுமை செய்கிறான். அது அல்லாஹ்வுக்கு அளவு கடந்த அன்பை ஏற்படுத்தி விடுகிறது. அதைப்போன்று மனிதன் விழுங்குகின்ற கோபத்தின் மிடறை விடவும் அதிகம் பிரியமான மிடறும் வேறெதுவும் இல்லை. கோபத்தைக் காட்டுகிற மிடறு அல்ல. கோபத்தை விழுங்குகிற மிடறு அல்லாஹ்வுக்கு அதிகம் பிடிக்கிறது. (முஸன்னிஃப் இப்னு அபீ ஷய்யா தொகுதி 8 பக்கம் 141. கிதாபுஸ்ஸுஹது பாபுஸ்ஸிக்ரி அன்னபிய்யினா ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் ஃபிஸ்ஸுஹதி. ஹதீஸ் 108. பைரூத்தில் உள்ள தாருல் ஃபிக்ர் அச்சகத்தில் அச்சிடப்பட்டது) மனிதன் கோபத்தை விழுங்கக்கூடிய பல சந்தர்ப்பங்கள் வருகின்றன. மனிதன் கோபத்தை விழுங்குகின்றான். அல்லாஹ்வுக்காக பொறுமை செய்கிறான். இது அல்லாஹ்வின் திருப்தியைப் பெற்றுத் தருவதாக அமைகிறது. எனவே சொந்த பிரச்சனையாக இருக்கட்டும். இதனால் எவரிடமிருந்தாவது கஷ்டம் ஏற்படலாம் அல்லது ஜமாஅத் விவகாரமாக இருக்கட்டும். அல்லாஹ்வின் திருப்தியைப் பெற வேண்டும் என்றால் அல்லாஹ் உடைய அன்பைப் பெற வேண்டும் என்றால் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் ஒரு விதிமுறையைக் கூறியுள்ளார்கள். அல்லாஹ்வின் முன் குனிதல் பொறுமையை வெளிப்படுத்துதல் ஆகியவை இறைவனின் நெருக்கத்தைப் பெற்றுத் தருகிறது.

ஓர் அறிவிப்பில் வருகிறது. அல்லாஹ் தனது நெருக்கமான அடியாருக்காக மிகவும் தன்மானம் காட்டுகிறான். அவருக்கு துன்பமும் நஷ்டமும் விளைவிக்கும் எதிரியைப் பிடிக்கின்றான். (சஹீஹ் புகாரி கிதாபுர்ரிகாயி பாபுத்தவாஸுஹ் ஹதீஸ் 6502) எந்த விவகாரத்தை அல்லாஹ் தனது கையில் எடுத்துக் கொண்டுள்ளனரோ அதனை அடியான் தனது கையில் எடுக்க வேண்டிய அவசியம் என்ன? அல்லாஹ் தன் பக்கம் குனிபவர் பொறுமை செய்பவரின் எதிரிகளிடம் பழிவாங்குகிறான் என்பது மட்டுமல்ல.

மாறாக, ஒரு சந்தர்ப்பத்தில் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறினார்கள்: அடியாரின் மீது அநீதியிழைக்கப்படும்போது அவர் பொறுமையை கையாண்டால் அல்லாஹ் அவருக்கு கண்ணியத்தை வழங்குகின்றான். (சுனன் திர்மிதி அப்வாபுஸ்ஸுஹது, பாபு மாஜாஅ மஸலுத்துன்யா மஸலு அர்பஅது ஃபிக்ரா) எவருக்கு இறைவன் கண்ணியத்தை வழங்குகின்றானோ அதனை விட ஓர் அடியாருக்கு வேறு என்ன கவுரவம் இருக்க முடியும்?

ஆக, இக்காலத்தில் அஹ்மதிய்யா ஜமாஅத்தின் மக்கள் மீது பல்வேறு நாடுகளில் கடுமை, துன்பம் மற்றும் தொல்லைகள் ஏற்படுகின்றன. இதன் மீது நமது பணியாவது அல்லாஹ்விடம் பொறுமை மற்றும் துஆவுடன் உதவி கேட்டவாறு அவன் முன்பு குனிய வேண்டும் என்பதாகும். அவனே மறுப்பின் தலைவர்களைப் பிடித்து அவர்களிடமிருந்து நம்மை காப்பாற்றுவதற்கும், அவர்களது சூழ்ச்சிகள் மற்றும் திட்டங்களிலிருந்து நம்மை காப்பாற்றுவதற்கும் எல்லாவற்றையும் விட அதிகமாக சக்தியுள்ளவன் ஆவான். ஜமாஅத்தின் வரலாற்றிலிருந்து இதனையே நாம் பார்த்து வருகிறோம். எதிரிகள் தமது எல்லா வகையான ஆற்றல்களையும், வசதிகளையும் கொண்டிருந்தும் தோல்வியையே அடைந்தனர். ஜமாஅத்தின் பாதங்கள் முன்னோக்கியே செல்கின்றன. பிரச்சனைகள் மற்றம் கஷ்டங்களின் காலத்தை ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) மற்றும் அவர்களது சஹாபாக்களும் கூட கடக்க வேண்டியது ஏற்பட்டது. அதனைக் கடந்த பிறகுதான் அவர்களுக்கே வெற்றி கிடைத்தது என்றால் பிறகு எந்த கஷ்டத்தையும் அனுபவிக்காமலேயே வெற்றியைப் பெறுவதற்கு நாம் எம்மாத்திரம்?

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுடைய கஷ்டத்தின் காலத்தைப் பற்றி குறிப்பிட்டவாறு ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் ஓரிடத்தில் கூறுகின்றார்கள்: 13 வருட காலம் ஒரு குறைவான காலம் இல்லை. இந்தக் காலத்தில் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் எந்த அளவுக்கு கஷ்டத்தைச் சந்தித்தார்கள் என்பதை விளக்குவதும் எளிய காரியமல்ல. சமூகத்தின் தரப்பிலிருந்து துன்பம் தொல்லைகள் தருவதில் எந்தக் குறைவும் வைக்கப்படவில்லை.

அவர்கள் கூறினார்கள்: இப்பக்கம் அல்லாஹ்வின் தரப்பிலிருந்தும் பொறுமையாகவும் உறுதியுடனும் இருக்குமாறு வழிகாட்டல் வழங்கப்பட்டது. ஒருபுறம் சமூகம் கஷ்டத்தைத் தந்து கொண்டிருந்தது. மறுபுறம் அல்லாஹ்வின் கட்டளையாவது, பொறுமையாக இருங்கள். உறுதியைக் காட்டுங்கள் என்பதாகும்.

அவர்கள் கூறுகின்றார்கள்: மீண்டும் மீண்டும் கட்டளை வந்தது. எவ்வாறு முந்தைய நபிமார்கள் பொறுமை காட்டினார்களோ அவ்வாறே நீரும் பொறுமை செய்வீராக.

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் முழுமையான பொறுமையுடன் கஷ்டங்களைப் பொறுத்துக் கொண்டார்கள். தப்லீகில் சோம்பேறித்தனம் காட்டியதில்லை. மாறாக, அடியை முன்னோக்கியே வைத்தார்கள்.

அவர்கள் கூறினார்கள்: அசல் என்னவென்றால் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுடைய பொறுமை முந்தைய நபிமார்களைப் போன்றதல்ல. ஏனெனில் அவர்கள் ஒரு குறிப்பிட்ட சமுதாயத்–திற்காக வந்திருந்தார்கள். எனவே அவர்களின் கஷ்டங்கள் தொல்லைகள் கூட அந்த அளவுக்கே இருந்தன. ஆனால் அவற்றுடன் ஒப்பிடும்போது ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுடைய பொறுமை மிக மிக அதிகமாக இருந்தது. ஏனெனில் எல்லாவற்றிற்கும் முதலில் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுடைய சொந்த சமூகமே அவர்களுக்கு எதிரியாகி விட்டது. தொல்லைகளைத் தந்தது. பிறகு கிறித்தவர்களும் எதிரிகளாயினர். (மல்ஃபூஸாத் தொகுதி 7 பக்கம் 198-199; 1985 ஆம் ஆண்டு பதிப்பு - இங்கிலாந்தில் அச்சடிக்கப்பட்டது) ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுடைய அடிமையாக இஸ்லாத்தின் பரப்புதலைத் திரும்பவும் செய்வதற்காகவும் இஸ்லாத்தின் மேன்மையை எல்லா மார்க்கத்தின் மீது நிரூபித்துக் காட்டுவதற்காகவும் இஸ்லாத்திலுள்ள பிரச்சனைகளை முடிவுக்குக் கொண்டு வந்து அவற்றையும் ஒரு கையில் ஒன்று சேர்த்து ஒரே உம்மத்தாக ஆக்குவதற்காக வந்தவரிடம் பைஅத் செய்து விட்டு நாமும் கூட நம்மவர் அந்நியர் அனைவரின் எதிர்ப்பையும் எதிர்கொள்ளவே நேரிடும். அன்னியர் இந்த அளவுக்கு பகிரங்கமாக உலகில் நம்மை எதிர்ப்பதில்லை. எந்த அளவுக்கு இஸ்லாத்தின் அந்த முதல் காலகட்டத்தில் செய்தார்களோ அதுபோன்று செய்யவில்லை. ஆனால் இம்மக்கள் அதாவது முஸ்லிம் அல்லாதவர்கள் எதிர்க்கும்போது பல்வேறு வழிகளில் சிந்தித்துப் பார்த்து நாங்கள் அநீதி எதுவும் இழைக்கவில்லை என்று கூறும் அளவுக்கு இஸ்லாத்தின் மீது தாக்குதல் தொடுக்கின்றனர். எவ்வாறிருப்பினும், கண்டிப்பாக எதிர்க்கின்றனர். இவர்களிடமிருந்தும் நாம் தற்காப்பு ஏதாவது வழியில் செய்ய வேண்டியதுள்ளது.

அதனை ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்: எந்த ஆயுதத்தை இஸ்லாத்தை ஒழிப்பதற்காக இஸ்லாத்தின் எதிரிகள் பயன்படுத்துகின்றார்களோ அதனையே நாமும் பயன்படுத்த வேண்டும். அவை நூல்கள் மற்றும் பிரசுரங்கள் என்ற ஆயுதங்களாகும். (சஷ்மயே மஃரிஃபத். ரூஹானீ கஸாயின் தொகுதி 23 பக்கம் 93) முஸ்லிம் அல்லாதவர்களின் உலகில் இஸ்லாம் பரவத் தொடங்கும்போது பிறகு முஸ்லிம் அல்லாத நாடுகளும் கூட இஸ்லாத்தை எதிர்க்கத் தொடங்கும். இங்குள்ள உள்ளூர் மக்களும் இஸ்லாத்தை ஒப்புக் கொள்கின்றனர். இன்னும் சொல்லப்போனால், சில இடங்களில் ஆரம்பத்தில் சர்ச்சுகளில் மகிழ்ச்சியுடன் நமக்கு நமது நிகழ்ச்சிகளை நடத்துவதற்கு இடம் தந்தவர்கள் இதன் பக்கம் மக்களின் கவனம் திரும்புவதைக் கண்டதும் எதிர்க்கத் தொடங்கி விட்டார்கள். அனுமதி தர மறுத்து விட்டார்கள். இந்த இஸ்லாம் உண்மையான இஸ்லாமாகும். அதனைத் தான் அஹ்மதிய்யா ஜமாஅத் பிரச்சாரம் செய்கிறது. பரப்புதல் செய்கிறது. இது ஒரு காலத்தில் வெற்றி பெற்று விடும் என்று அவர்களுக்கு தெரிய வருகிறது. உண்மையான இஸ்லாம் அஹ்மதிய்யத்தின் மூலம் தான் பரவ வேண்டும் என்று விதிக்கப்பட்டிருக்கிறது. ஆனால் இப்போது முஸ்லிம்களின் முல்லாக்கள் தமது பிரசங்க மேடைகள் பறிக்கப்படும் என்ற பயத்தினால் எல்லா இடத்திலும் எதிர்ப்பதில் முன் நிற்கிறார்கள். எனவே பழைய காலத்தில் மார்க்கங்களின் மீது செய்யப்பட்ட அநீதியைப் போன்று இப்போதும் செய்கின்றனர். அரசியல்வாதிகளும்கூட முல்லாக்களின் பின்னால் செல்கின்ற வாக்காளர்கள் கை விட்டுப் போய் விடக் கூடாதே என்பதற்காக ஒட்டு மற்றும் அற்ப விளம்பரத்திற்காக பின்செல்–கின்றனர். அது அல்லாமல் இவர்களுக்கு மார்க்கத்தைப் பற்றி அலிஃப் கூட தெரியாது. பெரும்பாலார் ஒருவேளை தொழுவதுமில்லை அல்லது ஜுமுஆவுக்கு மட்டும் வரலாம் அல்லது பெருநாளன்று தொழுபவர்கள் ஆவர். ஆனால் இஸ்லாத்தின் தன்மானம் என்ற பெயரில் அஹ்மதிகள் மீது கண்டிப்பாக தாக்குதல் தொடுக்கின்றனர் அல்லது அத்தகைய அஹ்மதிகள் மீது சட்டமியற்ற முயற்சி செய்கின்றார்கள். பாகிஸ்தானில் ஆஸாத் காஷ்மீரில் தற்போது பாகிஸ்தானின் மவ்லவியின் தாக்கத்தின் கீழ் அங்குள்ள அரசியல்வாதிகள், அஹ்மதிகளை முஸ்லிம் அல்லாதவர்களாகக் கூறுவதற்காக காஷ்மீர் அசெம்ப்ளியின் சட்ட முன் வடிவை எடுத்து வைக்கின்றனர். ஏன் முன் வைத்துள்ளனர்? எவ்வாறிருப்பினும் இவர்கள் என்ன செய்ய விரும்புகிறார்களோ செய்யட்டும். பாகிஸ்தானில் அசெம்ப்ளியில் அஹ்மதிகளை முஸ்லிம் அல்லாதவர் என்று கூறி என்ன பெற்று விட்டார்கள்? ஜமாஅத்தின் முன்னேற்றம் அதனால் தடைபட்டதா? அல்லாஹ்வின் அருளால் ஜமாஅத் புதிய புதிய வெற்றிகளைப் பெற்றுக் கொண்டே செல்கிறது. ஆனால் ஜமாஅத் அன்பர்கள் நினைவில் கொள்ள வேண்டும். பொறுமையுடன் அல்லாஹ்வின் உதவியைப் பெற துஆ செய்வது மற்றும் அவனுக்கு முன் குனிவது, தமது தொழுகை மற்றும் இறை வணக்கங்களைப் பாதுகாப்பது ஆகியவை ஒவ்வொரு அஹ்மதியின் கடமையாகும். இதுவே நம்மை அல்லாஹ்வின் அருளுக்கு மேலும் வாரிசாக்கும்.

பிறகு அல்ஜீரியாவில் எதிர்ப்பு உள்ளது. நான் பலமுறை குறிப்பிட்டு விட்டதைப் போன்று கடந்த குத்பாவிலும் கூறினேன். அஹ்மதிய்யத்தின் காரணமாக பலர் சிறையில் உள்ளனர். ஒரு வருடத்திலிருந்து மூன்று வருடங்கள் வரை தண்டனை தரப்பட்டுள்ளது. பல அஹ்மதிகளுக்கு தண்டனைக்–கான அறிவிப்பு தரப்பட்டு விட்டது. இதுவரை சிறைக்கு அனுப்பப்படவில்லையே தவிர எந்த நேரத்திலும் பிடித்து சிறைக்கு அனுப்பலாம். பல்வேறு வகையான கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டுள்ளன. அங்குள்ள முல்லாக்களுக்கு அஹ்மதிய்யத்தின் முன்னேற்றம் உறுத்துகிறது. அவர்களால் இருக்க முடியவில்லை என்ற காரணத்திற்காக மட்டுமே இவை நடந்துள்ளன.

அதேபோன்று பங்களாதேஷிலும் எதிர்ப்பு தொடர்கிறது. அரபு நாடுகளிலும் தொடர்கிறது. ஆனால் கடந்த நாட்களில் பங்களாதேஷிலும் ஓரிடம் அதன் பெயர் ஷூஹாகி ஆகும். மேமன் சிங் மாவட்டத்தின் ஒரு சிற்றூர். அங்குள்ள நமது மஸ்ஜிதின் மீது மவ்லவிகள் தாக்குதல் தொடுத்தனர். நமது முரப்பி முஸ்தஃபீஸுர் ரஹ்மான் ஸாஹிபை கடுமையான முறையில் கத்தியால் குத்தி படுகாயப்படுத்தி விட்டார்கள். கத்தியால் எந்த அளவுக்கு தாக்கியுள்ளார்கள். அவரது உடல் முழுவதையுமே சல்லடையாக்கி விட்டார்கள். வயிற்றை எவ்வாறு கிழித்துள்ளனர் என்றால் அவரது சிறுநீரகம் கூட வெளியில் வந்து விட்டதாகக் கூறப்படுகிறது. கழுத்தில் கிழித்துள்ளார்கள். ஆனால் சுவாசக் குழாயில் வெட்டு விழாமல் தப்பி விட்டது.

பார்த்தவர் கூறுகிறார்: ஒவ்வோர் இடத்தில் இருந்தும் இரத்தம் பீய்ச்சி அடித்தது. எவ்வாறிருப்பினும் போலீஸ் அங்கு வந்தது. அவர்கள் தாக்குதல் தொடுப்பவரிடமிருந்து அவரை விடுவித்து மருத்துவமனைக்குக் கொண்டு சேர்த்தனர். ஜமாஅத் மக்களும் சென்று சேர்ந்தார்கள். காதிம்களும் உடனடியாக சென்று இரத்தம் கொடுத்தனர். அல்லாஹ் அருள் புரிந்தான். மருத்துவ உதவி வந்து சேர்ந்தது. மருத்துவமனை சென்று சேர்ந்து விட்டார். அங்கு நல்ல மருத்துவர்களும் இருந்தனர். நல்ல சிகிச்சை நடந்தது. பல மணி நேரங்கள் அறுவை சிகிச்சை நடந்தது. நேற்று வரை கிடைத்த தகவலின்படி நிலைமை அதே நிலையில் இருக்கிறது. ஆனால் ஆபத்தைக் கடந்து விடவில்லை. சிறிதளவு நினைவும் திரும்பியது. நினைவு திரும்பியதும் பேச முடியவில்லை. ஆனால் பேப்பரும் பேனாவும் வாங்கி சில விஷயங்களை எழுதி தெரிவித்தார். அதிலும் கூட இவ்வளவு கஷ்டங்களை கடந்த நிலையிலும் கூட அவரிடம் வியத்தகு முஃமினின் அடையாளம் காணப்பட்டது. அதாவது மற்றவர்களைப் பற்றிய கவலை இருந்தது. அவர் இதனைத்தான் எழுதித் தந்தார். இன்ன முரப்பி ஸாஹிபை பாதுகாப்பாக வையுங்கள். அவருக்கும் ஆபத்துள்ளது என்றார் அல்லது தமது பெற்றோர் குறித்து கவலையை வெளிப்படுத்தி இருந்தார்.

அல்லாஹ் அவருக்கு உடல் நலத்துடன் கூடிய நீண்ட வாழ்வை வழங்குவானாக. முழுமையான விரைவான குணத்தை அளிப்பானாக. எவ்வாறிருப்பினும், இந்த எதிர்ப்புகளைக் குறித்து நமக்கு ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் முன்னரே கூறி விட்டார்கள். அஹ்மதிய்யத்தை ஒப்புக் கொண்டு விட்டால் பிறகு இந்த கஷ்டத்தை கடக்க வேண்டியது வரும்.

இந்த வகையில் இதனை விளக்கியவாறு ஹஸ்ரத் அக்தஸ் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறினார்கள்: நமது ஜமாஅத்திற்கும் கூட ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் காலத்து முஸ்லிம்களுக்கு வந்த பிரச்சனைகள் உள்ளன. இந்த வகையில் புதியதும், எல்லாவற்றிலும் பெரிய துன்பம் எது என்றால் ஒருவர் நமது ஜமாஅத்தில் இணையும் போது அவரது நண்பர்கள், உறவினர்கள், சம்பந்தங்கள் பிரிந்து விடுகின்றனர். எந்த அளவுக்கு என்றால் சில வேளைகளில் பெற்றோரும் சகோதர சகோதரிகளும் கூட எதிரியாகி விடுகின்றனர். அஸ்ஸலாமு அலைக்கும் கூட கூறுவதில்லை. ஜனாஸா தொழ விரும்புவதில்லை. இவ்வாறு பல பிரச்சனைகள் வருகின்றன.

அவர்கள் கூறினார்கள்: சில பலவீனமான இயல்புள்ள மக்களும் இருக்கிறார்கள் என்பதை நான் அறிகிறேன். அத்தகைய பிரச்சனைகளின்போது அவர்கள் பதறி விடுகின்றனர். ஆனால் நினைவில் கொள்ளுங்கள். இவ்வகை பிரச்சனைகள் வருவது அவசியமாகும். நீங்கள் நபிமார்கள் ரஸூல்மார்களை விட அதிகம் ஒன்றும் இல்லை. அவர்களுக்கும் இதுபோன்ற பிரச்சனைகள் கஷ்டங்கள் வந்தன. இறைவன் மீது ஈமான் உறுதியாவதற்காகவும் வருகின்றன. தூய மாற்றங்கள் ஏற்பட வாய்ப்பு கிடைப்பதற்காகவும் இவ்வகையான பிரச்சனைகள் வருகின்றன. துஆவில் மூழ்கி இருங்கள். எனவே நீங்கள் நபிமார்கள் ரஸூல்மார்களைப் பின்பற்றுவது அவசியமாகும். பொறுமையின் வழிமுறையைக் கடைபிடியுங்கள். உங்களுக்கு எந்த சேதமும் ஏற்படாது. உண்மையை ஒப்புக் கொண்டதற்காக உம்மை விட்டு விடுகின்ற நண்பர் நல்ல நண்பர் இல்லை. அத்தகைய நண்பரைப் பற்றி கவலைப்பட வேண்டிய தேவையில்லை. ஏனெனில் அவர் உண்மையான நண்பரல்ல. அவர் உமக்கு ஒத்துழைப்பும் தந்திருக்க வேண்டும். நீங்கள் இறைவனால் நிலைநாட்டப்பட்ட ஜமாஅத்தில் இணைந்தற்காக எவர்கள் உங்களை விட்டு இந்த காரணத்திற்காக பிரிகின்றார்களோ அவர்களிடம் சண்டையிடாதீர்கள். மாறாக, அவர்களுக்காக மறைவாக துஆ செய்யுங்கள். நமது நடைமுறை அதற்குப் பிறகும் இதுவேயாகும். மற்றவர்கள் எதிர்க்கின்றனர் என்றால் நாம் அவர்களுக்காக துஆதான் செய்ய வேண்டும். அல்லாஹ் அவர்களுக்கும் கூட தனது அருளால் உங்களுக்கு வழங்கிய அகப்பார்வையையும் இறை ஞானத்தையும் தருவதற்காக துஆ செய்ய வேண்டும். நீங்கள் உங்கள் தூய முன்மாதிரி மற்றும் உயரிய நடவடிக்கை மூலமாக நீங்கள் மிக நல்ல வழியையே மேற்கொண்டுள்ளீர்கள் என்று நிரூபித்துக் காட்டுங்கள். (மல்ஃபூஸாத் தொகுதி 7 பக்கம் 203; 1985 ஆம் ஆண்டு பதிப்பு - இங்கிலாந்தில் அச்சடிக்கப்பட்டது) அஹ்மதிய்யத்தை ஏற்றுக்

கொண்டதனால் எந்த குற்றமும் செய்யவில்லை; பாவமும் செய்யவில்லை. எந்த அசுத்தத்தின் பக்கமும் போகவில்லை; நல்ல வழியைத்தான் மேற்கொண்டுள்ளீர்கள் என்று நிரூபித்துக் காட்டுங்கள். இந்த எதிர்நடவடிக்கையைத்தான் இவர்களின் தாக்குதலுக்குப் பிறகு நாம் காட்ட வேண்டியதாகும். சந்தேகமின்றி சட்ட நடவடிக்கைகளை நாம் மேற்கொள்கிறோம். இவர்களின் சீர்திருத்தத்திற்காக துஆவும் செய்கிறோம். அத்துடன் குற்றவாளிகளுக்கு எதிரில் சட்ட நடவடிக்கையும் மேற்கொள்கிறோம். அதுவும் அல்லாஹ்வின் கட்டளையாகும். ஆனால் ஒருபோதும் பொறுமையைக் கைவிட மாட்டோம். கைவிடவும் கூடாது. ஒவ்வொரு சிக்கல்கள் கஷ்டங்களிலும் அல்லாஹ்வின் முன்னிலையிலேயே குனிகிறோம். அவன் முன்னாலேயே குனிவோம் – இன்ஷா அல்லாஹ். ஆனால் சில நேரங்களில் சிலரைப் பற்றி எனக்கு புகார் வருகிறது. அவர்கள் உட்கார்ந்திருக்கிற இடத்தில் அத்தகைய பிரச்சனைகள் இல்லை. அவர்களுக்கு அங்கு தப்லீகிற்காக சந்தர்ப்பங்கள் கிடைக்கின்றன. அவர்கள் நேரடியாக தப்லீக் செய்யும்போதோ அல்லது சமூக வலைதளங்களில் (Social Media) தப்லீக் செய்யும்போதோ சில மவ்லவிமார்களுடன் விவாதம் செய்யும் போதோ அல்லது தப்லீக் செய்யும் போது எந்த அளவுக்கு கடுமையான சொற்களைப் பயன்படுத்தி விடுகிறார்கள் என்றால் அது ஓர் அஹ்மதியின் நடைமுறை அல்ல.

ஒருவர் எழுதுகிறார்: அஹ்மதிகளின் வாயில் இருந்து அத்தகைய ஏச்சுக்களைக் கேட்டு மிகவும் சங்கடமாகி விடுகிறது. தமது எதிரிகளை அல்லது அஹ்மதி அல்லாத மவ்லவிகளிடம் விவாதம் செய்யும்போது அத்தகைய வார்த்தைகள் இவர்களது வாயிலிருந்து வெளிவந்து விடுகின்றன. எவ்வாறிருப்பினும் எந்தவோர் அஹ்மதிக்கும் அது அழகைத் தராது. இது எந்த அளவுக்கு உண்மை என்று அல்லாஹ்வே அறிந்தவன். நான் பார்க்கவில்லை.

ஒருவர் எழுதுகிறார்: அத்தகைய உரையாடல் நடக்கும்போது அஹ்மதிகளுடன் ஒப்பிடும்போது அஹ்மதி அல்லாதவர்களின் வார்த்தைகள் அதிக மென்மையாக இருக்கின்றன. இது உண்மை என்றால் நான் அத்தகைய அஹ்மதிகளிடம் கூறுவேன். நீங்கள் தப்லீக் செய்யாமல் இருப்பது நல்லது. இந்த தப்லீக் அவர்களை அல்லாஹ்வின் நெருக்கத்தைப் பெற்றுத் தருவதற்குப் பதில் அல்லாஹ்வின் கோபத்தைப் பெறுவதற்கு காரணமானதாக ஆகி விடும். ஹதீஸ்களில் கூறப்பட்டிருப்பதுபோன்று அல்லாஹ்வுக்கு பொறுமை மற்றும் கோபத்தின் மிடறை அருந்துபவரே மிகவும் பிரியமானவர். நாம் பிரகடனம் செய்வதோ எவரிடம் ஆதாரம் இல்லையோ அவர் தான் கோபம் கொள்வார் என்பதாகும். பிறகு நம்மிடம் ஆதாரம் இருக்கும்போது நாம் கோபப்படுவதில் எந்த நியாயமும் இல்லை.

ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களுடைய இந்த விஷயத்தை நாம் நினைவில் கொள்ள வேண்டும். அன்னார் கூறுகின்றார்கள்: பாருங்கள். ஒவ்வொரு குழப்பமான இடங்களிலிருந்து விலக வேண்டும் என்ற மீண்டும் மீண்டும் வழிகாட்டுவதற்காகவே நான் நியமிக்கப்பட்டுள்ளேன். ஏச்சுக்களைக் கேட்டும் பொறுமையை மேற்கொள்ளுங்கள். தீமைகளுக்கு நன்மைகளால் பதில் கூறுங்கள். எந்தக் குழப்பத்திலும் ஈடுபட வேண்டாம். நீங்கள் அத்தகைய இடத்திலிருந்து அகன்று விடுவது நல்லது. மென்மையுடன் பதில் கூறுங்கள். சில நேரங்களில் இவ்வாறும் நடக்கிறது. ஒருவர் மிகவும் ஆவேசத்துடன் எதிர்க்கிறார். எதிர்ப்பில் அவர் மேற்கொள்ளும் நடைமுறை குழப்பத்தின் நடைமுறையாக உள்ளது. அதனை கேட்பவருக்கு கிளர்ச்சிக்கான தூண்டுதல் ஏற்படுகிறது. ஆனால் எதிர்புறமிருந்து மென்மையான பதில் கிடைக்கிறது எனில் ஏச்சுக்களுக்கு எதிர் செயல் செய்யப்படவில்லை எனில் அவருக்கே வெட்கம் வந்து விடுகிறது. நமக்கு இதுவே போதனையாகும். ஏச்சுகள் இருந்தாலும் மென்மையாகப் பதில் கூறுங்கள்.

அவர்கள் கூறுகின்றார்கள்: இதனால் அவருக்கே வெட்கம் ஏற்படுகிறது. அவருக்கே சங்கடமாகி விடுகிறது. பலமுறை இதுபோன்ற சம்பவங்கள் ஏற்பட்டுள்ளன. நல்லியல்பு கொண்ட எதிரிகளுக்கு வெட்கம் வந்து விடுகிறது.

அவர்கள் கூறுகின்றார்கள்: நான் உங்களிடம் உண்மையாகவே கூறுகிறேன். பொறுமையைக் கைவிட்டு விடாதீர்கள். பொறுமை என்ற ஆயுதம் எத்தகையது எனில் துப்பாக்கியினால் வெளிப்படாத பணிகள் பொறுமையினால் விளைந்து விடுகின்றன. பொறுமைதான் உள்ளத்தை வெற்றி கொள்கிறது. நிச்சயமாக நினைவில் கொள்ளுங்கள். இன்ன மனிதர் ஜமாஅத்தைச் சார்ந்தவராக இருந்தும் ஒருவருடன் சண்டையிட்டார் என்பதைக் கேள்விப்பட்டு எனக்கு மிகுந்த வருத்தம் ஏற்படுகிறது. இந்த நடைமுறையை நான் ஒருபோதும் விரும்புவதில்லை. எந்த ஜமாஅத் உலகில் ஒரு முன்மாதிரியாக இருக்குமோ அந்த ஜமாஅத் தக்வா அல்லாத வழியைக் கடைபிடிப்பதை இறைவன் விரும்புவதில்லை. அல்லாஹ் இந்த விவகாரத்தில் எந்த அளவுக்கு ஆதரவளிக்கின்றான் எனில் ஒரு மனிதர் இந்த ஜமாஅத்தில் இருந்து கொண்டு பொறுமை மற்றும் சகிப்புத்தன்மையை பயன்படுத்தவில்லை எனில் அவர் இந்த ஜமாஅத்தில் இணையவில்லை என்பதை நினைவில் கொள்ளட்டும்.

அவர்கள் கூறுகின்றார்கள்: மிகவும் கோபவேசத்திற்குக் காரணம் இல்லை. அதாவது என் மீது அசுத்தமான ஏச்சுப் பேச்சு வீசப்பட்டுள்ளது என்பதே ஒருவர் கோபம் கொள்ள பெரிதும் காரணமாக உள்ளது. இதனை இறைவனிடம் விட்டு விடுங்கள். நீங்கள் இதற்கு தீர்ப்பளிக்க இயலாது. எனது விவகாரத்தை இறைவனிடம் விட்டு விடுங்கள். நீங்கள் ஏச்சுப் பேச்சுக்களைக் கேட்ட பிறகும் கூட பொறுமையை கடைபிடியுங்கள். உங்களுக்கு என்ன தெரியும்? நான் இவர்களிடமிருந்து எந்த அளவுக்கு ஏச்சுக்களை கேட்கிறேன் என்று உங்களுக்கு என்ன தெரியும்? பெரும்பாலும் இவ்வாறு நடக்கிறது. அசுத்தமான ஏச்சுக்களால் நிறைந்த கடிதங்கள் வருகின்றன. திறந்த அஞ்சல் அட்டைகளில் ஏசி எழுதுகிறார்கள். ஸ்டாம்ப் இல்லாமலும் அனுப்புகிறார்கள். அபராதம் செலுத்த வேண்டியும் வருகிறது. பிறகு படித்துப் பார்க்கும்போது வெறும் ஏச்சுக்கள் நூற்றுக்கணக்கில் இருக்கின்றன. அத்தனை ஏச்சுக்களைப் பார்க்கும்போது எந்த இறைதூதருக்கும் அத்தகைய ஏச்சுக்கள் தரப்பட்டிருக்காது என்று நான் நிச்சயமாக அறிவேன். அபூஜஹ்லிடம் கூட அத்தகைய ஏச்சுக்கள் இருக்கும் என்பதை நான் ஏற்க மாட்டேன். ஆனால் இவை அனைத்தையும் கேட்க வேண்டியது வருகிறது. நான் பொறுத்துக் கொள்ளும்போது நீங்கள் பொறுத்துக் கொள்ள வேண்டியது உங்கள் மீது கடமையாகும். மரத்தை விட கிளை ஒன்றும் பெரிதல்ல. நீங்கள் பாருங்கள். இவர்கள் எதுவரை ஏசப் போகிறார்கள்? கடைசியில் சோர்ந்துபோய் விடுவார்கள். இவர்களது ஏச்சுக்கள், விஷமங்கள், திட்டங்கள் என்னை ஒருபோதும் சோர்வடையச் செய்ய முடியாது. நான் இறைவன் புறமிருந்து வரவில்லையென்றால் சந்தேகமின்றி இவர்களின் ஏச்சினால் பயந்திருப்பேன். ஆனால் நான் நிச்சயமாக அறிகிறேன். இறைவன் என்னை நியமித்திருக்கிறான். இத்தகைய சிறிய விஷயத்தை நான் எதற்கு பொருட்படுத்த வேண்டும். அது ஒருபோதும் முடியாது. நீங்கள் சிந்தியுங்கள். ஒன்று சிந்தியுங்கள். இவர்களின் ஏச்சுக்கள் யாருக்கு நஷ்டத்தை ஏற்படுத்தியுள்ளன? அவர்களுக்கா? எனக்கா? அவர்களின் ஜமாஅத் குறைந்துள்ளது. எனது ஜமாஅத் வளர்ந்துள்ளது. இவர்களின் ஏச்சுக்கள் ஏதும் தடை ஏற்படுத்த முடியும் எனில் இப்போது ஜமாஅத் 2 இலட்சம் பேராக பரவியுள்ளது. அக்காலத்தில் அன்னார் இதனைக் கூறியுள்ளார்கள். இன்று இந்த ஏச்சுக்களுக்கு இடையிலும் அல்லாஹ்வின் அருளால் 209 நாடுகளில் ஜமாஅத் நிலைநாட்டப்பட்டுள்ளது.

கூறுகிறார்கள்: இம்மக்கள் இவர்களிடம் இருந்துதான் வந்துள்ளனரா? வேறு யாரிடமும் இருந்தா? ஏசுபவர்களிடமிருந்து இவர் மக்களும் ஜமாஅத்தில் இணைந்துள்ளனர். இவர்கள் எம்மீது குஃப்ர் ஃபத்வா வழங்கினர். இதனால் இவர்கள் பெற்றது என்ன? குஃப்ர் ஃபத்வாவின் விளைவு எப்படி வெளிப்பட்டது? ஜமாஅத் வளர்ந்தது. இந்த இயக்கம் சதித்திட்டங்களால் நடத்தப்படுவதாக இருந்தால் இந்த ஃபத்வாக்களுக்கு கண்டிப்பாக ஒரு தாக்கம் ஏற்பட்டிருக்கும். இந்த ஜமாஅத்தை உருவாக்குவது எனது திட்டமாக இருந்திருந்தால் இந்த ஃபத்வாக்களுக்கு தாக்கம் ஏற்பட்டிருக்க வேண்டும். ஆனால் எந்த தாக்கமும் ஏற்படவில்லை.

அவர்கள் கூறுகிறார்கள்: எனது வழியில் இந்த ஃபத்வாக்கள் பெரும் தடையாக இருந்திருக்கும். ஆனால் ஒரு விஷயம் இறைவனிடமிருந்து வந்திருக்கும் எனில் அதனை அழிப்பது மனித சக்திக்கு உட்பட்டதல்ல. எனக்கு எதிராக என்னென்ன திட்டங்களை எதிரிகளால் செய்யப்படுகின்றனவோ அதனை கண்டறிபவர்களுக்கு பரிதாபம்தான் ஏற்படுகிறது. நான் பகிரங்கமாகவே கூறுகின்றேன். என்னை எதிர்ப்பவர்கள், முழு வீச்சோடு வருகின்ற ஒரு நதியின் மீது கையை நீட்டி அதனை தடுக்க விரும்புகின்றனர். அதன் விளைவு வெளிப்படையானது. அதனை நிறுத்த முடியாது. இந்த ஏச்சுக்களால் தடுக்க நினைப்பவர்கள் நினைவில் கொள்ளுங்கள். ஒருபோதும் நிற்காது.

அவர்கள் கூறுகின்றார்கள்: ‘‘ஏசுவது கண்ணியமானவர்களின் பணியா? நான் அத்தகைய முஸ்லிம்கள் மீது பரிதாபப்படுகிறேன். இவர்கள் எத்தகைய முஸ்லிம்கள்? இவர்கள் எவ்வளவு அசுத்தமான முறையில் நாவை திறக்கிறார்கள். நான் அல்லாஹ்வின் மீது சத்தியமிட்டுக் கூறுகிறேன். இத்தகைய அசுத்தமாக ஏச்சுக்களை துப்புறவுத் தொழிலாளிகளிடம் கூட கேட்டதில்லை. அதனை இந்த முஸ்லிம் என்று அழைக்கப்படுபவர்களிடமிருந்து கேட்டுள்ளேன். இந்த ஏச்சுக்களின் மூலம் இவர்கள் தமது அக நிலையை வெளிப்படுத்தியுள்ளனர். இவர்கள் தாம் தீயவர்கள் என ஒப்புக் கொள்கின்றனர். இறைவன் இவர்களது கண்களைத் திறப்பானாக. இவர்கள் மீது கருணை காட்டுவானாக.’’ (மல்ஃபூஸாத் தொகுதி 7 பக்கம் 203-205; 1985 ஆம் ஆண்டு பதிப்பு - இங்கிலாந்தில் அச்சடிக்கப்பட்டது) ஆகவே நினைவில் கொள்ள வேண்டும். சமூக ஊடகங்களில் சில அஹ்மதிகள் கோபப்பட்டு தவறான முறையில் கடுமையான முறையில் இவர்களுக்கு பதில் தருகிறார்கள் என்றால் அவர்கள் தவறு செய்கிறார்கள். இதனால் ஒரு பாவம் அல்ல. புதிய தலைமுறைகளையும் கூட அஹ்மதிய்யத்தை விட்டு விலக்குகிற பாவத்தையும் அவர்கள் செய்கின்றனர். நம்மிடம் ஆதாரம் இல்லைபோலும். அதனால்தான் கடுமை காட்டுகிறார்கள் என்று நமது இளைஞர்கள்

நினைக்கிறார்கள். ஆனால் அது தவறாகும். அத்தகையவர்கள் உடனே தமது நடவடிக்கைகளை மாற்ற வேண்டியது அவசியமாகும். நான் ஏற்கனவே கூறியதுபோன்று ஏச்சுக்களுக்கு ஏச்சுக்களால் பதில் தருவது என்பதன் பொருள் நம்மிடம் ஆதாரம் இல்லை என்பதாகும். ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் மீண்டும் மீண்டும் பல்வேறு வழிகளில் நாம் பொறுமையை மேற்கொள்ள வேண்டும் என்று நமக்கு புரிய வைத்தார்கள்.

நான் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களின் ஒரு மேற்கோளை எடுத்து வைக்கிறேன். நான் மீண்டும் மீண்டும் இதனை எடுத்து வைக்கக் காரணம் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களுடைய போதனைகளை எல்லாரிடமும் தெளிவுபடுத்துவதற்காகவே ஆகும்.

ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்: என்னை ஏசுகிறார்கள். நான் அதனை பொருட்படுத்துவதில்லை. அதற்காக வருத்தப்படவும் இல்லை. ஏனெனில் இவர்களின் இயலாமை வெளி வந்து விட்டது. அவர்களது இயலாமை ஏசுவதன் மூலமாகவே அன்றி மறைக்க முடியாது. எனவே ஏசுகிறார்கள். இவர்களிடம் ஆதாரம் எதுவும் இல்லை. இயலாமை ஏற்பட்டு விட்டது. ஆதாரம் இல்லாததனால் ஏசுகின்றார்கள்.

ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்: குஃப்ர் ஃபத்வா கொடுங்கள். பொய் வழக்குகள் போடுங்கள். விதவிதமான இட்டுக்கட்டு –களையும் அவதூறுகளையும் கூறுங்கள். எல்லா ஆற்றல்களையும் பயன்படுத்தி என்னை எதிர்த்துப் பாருங்கள். பிறகு இறைவனது இறுதி தீர்ப்பு யாருக்கு சாதகமாக இருக்கிறது என்று பாருங்கள். நான் ஏச்சுக்களைப் பொருட்படுத்தினால் இறைவன் என்னிடம் ஒப்படைத்த அசல் பணிகள் தேங்கி விடும். எனவே நான் இவர்களின் ஏச்சுக்களைப் பொருட்படுத்த மாட்டேன். நான் எனது ஜமாஅத்திற்கு போதனை செய்கிறேன். அவர்களும் ஏச்சுக்களைக் கேட்டுப் பொறுத்துக் கொள்வதே சரியானது. ஒருபோதும் ஒருபோதும் ஏச்சுக்கு ஏச்சுக்களால் பதில் தராதீர்கள். இதனால் பரக்கத் போய் விடுகிறது. பொறுமை மற்றும் சகிப்புத்தன்மையின் முன்மாதிரியை காட்டுங்கள். தமது நல்லொழுக்கத்தைக் காட்டுங்கள். நிச்சயமாக நினைவில் கொள்ளுங்கள். அறிவுக்கு ஆவேசத்திற்கும் இடையில் கடுமையான பகைமை உள்ளது. கோபமும் ஆவேசமும் வந்தால் அறிவு நிலைத்து நிற்பதில்லை. ஆனால் பொறுமை செய்தால் சகிப்புத்தன்மையின் முன்மாதிரியைக் காட்டியால் அவருக்கு ஓர் ஒளி தரப்படும். இதனால் அவரது அறிவு ஆற்றலின் சக்திகளில் ஓர் ஒளி உருவாகிறது. பிறகு ஒளியில் இருந்து ஒளி உருவாகிறது. கோபம் ஆவேசம் கொண்ட நிலையில் மனமும் மூளையும் இருளாக இருப்பதால் இருளினால் இருளே உருவாகிறது. (மல்ஃபூஸாத் தொகுதி 3 பக்கம் 180; 1985 ஆம் ஆண்டு பதிப்பு - இங்கிலாந்தில் அச்சடிக்கப்பட்டது) ஆகவே அறிவு ஆற்றலை அதிகரிக்க வேண்டும் எனில் உள்ளத்திலும் மூளையிலும் ஒளியை உருவாக்க வேண்டும் எனில் எப்போதும் கோபத்தை அடக்க வேண்டும். அப்போதுதான் அல்லாஹ்வின் அருள் மேலும் அதிகமாகும். அஹ்மதிய்யா ஜமாஅத்தின் முன்னேற்றம் எந்த கோபத்தையும் காட்டியதால் ஏற்பட்டதல்ல. அல்லாஹ் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களுக்கு வெற்றியைத் தருவான் என்பது அல்லாஹ்வின் வாக்குறுதியாகும்.

எனவே அவன் வெற்றியைத் தர வேண்டும் எனில் அப்பணியில் அவன்தான் பரக்கத்தைப் போட வேண்டியதுள்ளது. நாம் எந்த தப்லீக் அல்லது எது செய்தாலும் சரி பிறகு நாம் அல்லாஹ்வுடைய திருப்தியைப் பெறுவதற்கு தான் முயற்சி செய்ய வேண்டும். நாம் எப்போதும் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறுகின்ற இவ்விஷயத்தை கண் முன் நிறுத்தியவாறு நமது வாழ்வைக் கழிக்க வேண்டும்.

அன்னார் கூறுகிறார்கள்: உலகியல் மக்கள் காரணிகளை நம்புகிறார்கள். வெளிப்படையான பொருள்களை நம்புகிறார்கள். அல்லாஹ்வுக்கு அத்தகைய நிர்பந்தம் இல்லை. அல்லாஹ் எந்த காரணியின் தேவை உடையவனும் அல்ல. அவன் விரும்பும் போது எந்தக் காரணமும் இல்லாமல் வேலைகளைச் செய்து தந்து விடுகிறான். சில வேளைகளில் காரணிகளால் செய்கிறான். சில நேரங்களில் செய்யப்பட்ட பணிகளைப் புரட்டி விடுகிறான்.

ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்: சுருக்கமாக உங்கள் செயல்களை தூய்மையாக்குங்கள். நமக்கு போதனை செய்கிறார்கள். இறைவனை எப்போதும் நினைவு கூறுங்கள். கவனமற்று இருக்காதீர்கள். ஓடக்கூடிய இரை சிறிது மெத்தனம் காட்டினாலும் வேட்டையாடுபவரின் ஆதிக்கத்தில் வந்து விடுவதுபோன்றே இறைவனது நினைவில் இருந்து கவனமற்று இருப்பவர் ஷய்த்தானுக்கு இரையாகி விடுவார். இந்த உதாரணத்தை எப்போதும் நினைவில் கொள்ளுங்கள். எங்கு பயந்து ஓடக்கூடிய இரையானது வேட்டையாடக் கூடியவனிடம் சிறிது மெத்தனமாக இருந்தாலும் அவனது ஆதிக்கத்தில் வந்து விடுகின்றது. அதேபோன்று மனிதன் தனது இறை வணக்கத்தில் சிறிது மெத்தனம் காட்டினாலும் துஆவிலும் இறைவனிடம் உதவி கேட்டலிலும் மெத்தனம் காட்டினாலும் அவன் ஷய்த்தானின் இரையாகி விடுகிறான்.

ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்: தவ்பாவை எப்போதும் உயிருடன் வையுங்கள். கண்டிப்பாக நினைவில் கொள்ளுங்கள். தவ்பாவை எப்போதும் உயிருடன் வைத்திருங்கள். ஒருபோதும் இதனை மரணிக்க விடாதீர்கள். இஸ்திக்ஃபார் மிக அதிகமாக செய்யுங்கள். எந்த உறுப்பு வேலை வாங்கப்படுகிறதோ அதுவே பயன்படுகிறது. எது பயன்படுத்தப்படாமல் விட்டு விடப்படுகிறதோ அது நிரந்தரமாகப் பயனற்றுப் போய் விடுகிறது. இதுபோன்று தவ்பாவை இயக்கத்தில் உள்ளதாக வைத்திருங்கள். அதனால் அது செயலற்று விடாமல் இருக்கும். நீங்கள் உண்மையான தவ்பா செய்யவில்லை எனில் அது பாறைகளின் மீது விதைக்கப்பட்ட விதை போன்றது. உண்மையான தவ்பா என்பது தரம் வாய்ந்த நிலத்தில் விதைக்கப்பட்டது போன்றது. அது உரிய நேரத்தில் கனிகளைத் தருகிறது.

ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்: இக்காலத்தில் தப்வாவில் பெரும் சிரமங்கள் உள்ளன. காதியானுக்கு வந்திருந்த சிலருக்கு போதனை செய்து கொண்டிருந்தார்கள். நீங்கள் இங்கிருந்து போனதும் நிறைய விஷயங்களைக் கேட்க வேண்டியது வரும். மக்கள் நிறைய பேசுவார்கள். நீங்கள் தஜ்ஜால் காஃபிர் போன்றவரிடம் பைஅத் செய்துள்ளீர்கள் என்பார்கள். அவ்வாறு கூறுபவரிடம் ஒருபோதும் ஆவேசம் காட்டக் கூடாது. அல்லாஹ்வின் அருளால் நாம் பொறுமைக்காக நியமிக்கப்பட்டுள்ளோம். எனவே நீங்கள் அவர்களுக்காக துஆ செய்ய வேண்டும். அல்லாஹ் அவர்களுக்கும் நேர்வழி காட்டுவானாக. அவர்கள் உங்களுடைய பேச்சை ஏற்க மாட்டார்கள் என எவ்வாறு நீங்கள் எதிர்பார்க்கிறீர்களோ அவ்வாறே நீங்களும் அவர்களை விட்டு முகத்தைத் திருப்பிக் கொள்ளுங்கள்.

ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறினார்கள்: நாம் வெற்றி பெறுவதற்கான ஆயுதம் இஸ்திக்ஃபார் தவ்பா, மார்க்க அறிவை அறிந்திருப்பது இறைவனது மகத்துவத்தைக் கருத்தில் கொள்வது ஆகியவையாகும். ஐவேளை தொழுகைகளை நிறைவேற்றுவது அவசியமானவையாகும். தொழுகை துஆ ஒப்புக் கொள்ளப்படுவதற்கான சாவியாகும். தொழும்போதும் அதில் துஆ செய்யுங்கள். கவனமற்று இராதீர்கள். ஒவ்வொரு தீமையிலிருந்தும் அது இறைவனுக்கு செலுத்த வேண்டிய உரிமைகள் தொடர்பாயினும் சரி அல்லது அடியார்களுக்கு செலுத்த வேண்டிய உரிமை தொடர்பானதாக இருப்பினும் சரி அவற்றிலிருந்து தப்பித்துக் கொள்ளுங்கள். (மல்ஃபூஸாத் தொகுதி 5 பக்கம் 303; 1985 ஆம் ஆண்டு பதிப்பு - இங்கிலாந்தில் அச்சடிக்கப்பட்டது) ஆகவே நமது பணியாவது அல்லாஹ்வுடன் தொடர்பை ஏற்படுத்த வேண்டும். அவனது கட்டளையின்படி செல்வதற்கு எப்போது முயற்சி செய்ய வேண்டும். அவனது வழியில் தியாகங்களை பொறுமையுடன் நிலைத்து நின்றவாறு ஏற்றுக் கொள்பவராக இருப்போமாக. அல்லாஹ் நம்மை பொறுமை மற்றும் துஆவுடன் அவன் வழியில் செல்வதற்கு தவ்ஃபீக் தருவானாக. நாம் எப்போதும் அல்லாஹ்வின் அருள் மற்றும் வெகுமதிகளைப் பெறுபவர்களாக இருப்போமாக.

தொழுகைக்குப் பிறகு நான் ஒரு ஜனாஸா காயிப் தொழுகை தொழ வைப்பேன். கண்ணியத்திற்குரிய P.P. நாஸிமுத்தீன் சாஹிப் அவர்கள் இந்தியாவிலுள்ள கேரளாவின் பயங்காடியைச் சார்ந்தவர். 3 மே அன்று இரயில் விபத்தில் வஃபாத் ஆகி விட்டார். إِنَّا لِلّٰهِ وَإِنَّا إِلَيْهِ رَاجِعُوْنَ

இவர் காரில் போய்க் கொண்டிருந்தபோது விபத்து நிகழ்ந்து விட்டது. திருக்குர்ஆன் கண்காட்சிக்காக ஒரு கூட்டத்திற்குப் போய் விட்டு திரும்பிக் கொண்டிருந்தபோது இந்த சம்பவம் நடந்துள்ளது. நல்ல களங்கமற்ற மனிதர். உலகத்தை விட மார்க்கத்திற்கு எப்போதும் முன்னுரிமை தருபவர். காதியானின் இஜ்திமா, ஷூரா, ஜல்ஸா எல்லா –வற்றிலும் பங்கெடுப்பவர். மிகவும் செயற்துடிப்புள்ள உறுப்பினராக இருந்தார். இப்போது மாவட்டத்தின் பொருளாளராக மார்க்கப் பணியாற்றும் வாய்ப்பும் பெற்றிருந்தார். வஃபாத்தின்போது இந்தியாவின் நாயிப் சத்ர் அன்ஸாருல்லாஹ்வாக பணியாற்றி வந்தார். இவர் நீண்ட காலம் துபாயில் இருந்தார். அங்குள்ள ஜமாஅத்தின் முதல் அமீராக இருக்கும் நல்வாய்ப்புப் பெற்றிருந்தார். இவரது தொடர்புகள் மிகவும் பரந்ததாகும். அந்தத் தொடர்புகளை எப்போதும் ஜமாஅத்திற்காகவே பயன்படுத்தினார். ஜமாஅத்தின் அமைப்பை மிகவும் பேணுபவர். தமது உடன் இருப்பவர்களையும் பேண வைப்பவர். இறைவணக்கம் செய்பவர். திருக்குர்ஆன் ஓதுபவர். மிகவும் பணிவுள்ளவர். மென்மையான இயல்புக்கு சொந்தக்காரர். மக்களுக்கு பயனுள்ளவராகத் திகழ்ந்தவர். பிள்ளைகளுக்கும் நல்ல முறையில் தர்பிய்யத் கொடுத்தவர். எப்போதும் நன்மைகளையே அறிவுறுத்தி வந்தார். கிலாஃபத்துடன் தொடர்பு வைத்திருக்குமாறு அறிவுறுத்தி வந்தார். மர்ஹூம் வஸிய்யத் செய்தவர். அவரது ஒரு மகள் இங்கும் வசிக்கிறார். ஒரு மகன் துபாயில் இருக்கிறார். அல்லாஹ் இவரது தகுதியை உயர்த்துவானாக. இவரது பிள்ளைகளுக்கும் இவரது நன்மைகளை தொடரவும் கிலாஃபத்துடனும் ஜமாஅத்துடனும் தொடர்புள்ளவர் –களாக இருக்கும் நல்வாய்ப்பு தருவானாக.

★ ★ ★ ★ ★

# ஜுமுஆ பேருரை

இஸ்லாத்தின் போதனை ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் மீது இறங்கியது. அது ஒவ்வொரு விஷயத்திலும் நமக்கு வழிகாட்டுகிறது. நம்மில் ஒவ்வொருவரும் இந்த வழிகாட்டலின்படி செயல்படுபவர்களாகி விட்டால் ஓர் அழகிய சமூகம் உருவாக முடியும்.

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களது முழு வாழ்வும், வீட்டிலிருந்து சமூகத் தொடர்பு வரை திருக்குர்ஆனின் எல்லா கட்டளைகளின்படியும் அமல் செய்வதாக இருந்தது. ஆகவே உண்மையான வெற்றி நாம் எல்லா விவகாரத்திலும் இந்த முன்மாதிரியைக் கண்முன் வைக்கும்போதுதான் ஏற்பட முடியும். சிலவேளை மனிதன் பெரும் பெரும் விவகாரங்களில் மிக நல்ல முன்மாதிரி காட்டுபவனாக இருக்கிறான். ஆனால் வெளிப்படையாக சிறியதாகத் தெரிகிற விஷயமானது அதற்கு எந்த முக்கியத்துவம் இல்லாதது போன்று அலட்சியம் செய்யப்படுகிறது.

நாம் நமது வாழ்வை அமைதி நிறைந்ததாக ஆக்க விரும்பினால் நாம் அல்லாஹ் உடைய அருள்களைப் பெற விரும்பினால் நாம் அதே நல்லொழுக்கங்களை நமது வாழ்வில் அங்கமாக்க வேண்டிய அவசியம் உள்ளது. அது நமது எஜமானரும் வழிகாட்டியுமான ஹஸ்ரத் முஹம்மது முஸ்தஃபா (ஸல்) அவர்கள் ஒவ்வொரு விவகாரத்திலும் நம்முன் எடுத்து வைத்ததாகும். பிறகு இக்காலத்தில் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுடைய உண்மையான அடியார் அதனை தெளிவாக நம்முன் வைத்தார்கள்.

இப்போது நான் இது தொடர்பாக பல்வேறு நிலைகளில் ஆண்களின் பொறுப்புகள் சம்பந்தமாக எடுத்து வைப்பேன். வீட்டில் தலைவர் என்ற முறையிலும் ஆணுக்கு பொறுப்பு இருக்கிறது. ஆணுக்கு கணவர் என்ற முறையிலும் பொறுப்புகள் இருக்கின்றன. ஆணுக்கு தந்தை என்ற முறையிலும் பொறுப்புகள் இருக்கின்றன. சந்ததிகள் என்ற அடிப்படையிலும் பொறுப்புகள் உள்ளன. ஒவ்வோர் ஆணும் பொறுப்புகளைப் புரிந்து கொண்டால், அதனை நிறைவேற்ற முயன்றால் அதுவே சமூகத்தின் பரந்த அளவிலான அமைதியை நிலைநாட்டவும், அன்பு, சகோதரத்துவத்தை நிலைநாட்டும் வழியாகவும் ஆகி விடும். இதுவே சந்ததிகளின் தர்பிய்யத்திற்கு வழியாக ஆகி முழு அமைதியுடன் மனித உரிமையை நிலைநாட்டக் கூடிய சந்ததிகள் பரவுவதற்கும் அது காரணியாக அமைந்து விடுகிறது. வீடுகளின் அமைதி இதனால் நிலைநாட்டப்படுகிறது.

ஹஸ்ரத் மஸீஹ் மவ்ஊது (அலை) அவர்களை ஏற்றுக் கொண்ட பிறகும் கூட (பிற) மக்களைப் போன்றும், மார்க்கத்தைப் பற்றி அறிவே இல்லாத முஸ்லிம்களைப் போன்றும் இருக்கின்றனர் என்றால், தமது மனைவி மக்களுடன் அறிவற்றவர்களைப் போன்று அறிவீனமான செயல்களைச் செய்கிறார்கள் என்றால் தமது நிலைகளை மாற்றிக் கொள்வதாக உறுதிமொழி எடுத்த பிறகும் அவர்களிடம் மாற்றம் ஏற்படாமல் இருந்தால் ஹஸ்ரத் மஸீஹ் மவ்ஊது (அலை) அவர்களிடம் பைஅத் செய்ததனால் அவர்களுக்க எந்தப் பயனும் இல்லை.

வீடுகளை அமைதி நிறைந்ததாக ஆக்க வேண்டும் என்றால், அடுத்த தலைமுறைக்கு தர்பிய்யத் வழங்க வேண்டும் என்றால் அவர்களை மார்க்கத்துடன் தொடர்புள்ளவர்களாக ஆக்க வேண்டும் என்றால் ஆண்கள் தமது நிலைமைகளை கவனிக்க வேண்டும்.

இந்தியா மற்றும் பாகிஸ்தானில் மனைவியர் தமது கணவன்மாரைக் குறித்து எழுதுகின்றனர். காதியானிலும் பாகிஸ்தானிலும் நஸாரத் இஸ்லாஹ் வ இர்ஷாத் மற்றும் கிளை அமைப்புகள் இதன் பக்கம் கவனம் செலுத்த வேண்டும். எஞ்சிய உலகிலும் சரி தமது தர்பிய்யத் நிகழ்ச்சிகளில் அதிக கவனம் செலுத்த வேண்டும். தப்லீக் செய்கிறார்கள். மார்க்க விவகாரங்களைக் கற்கிறார்கள். ஆனால் வீட்டில் நிம்மதியின்மை இருந்தால் அந்த அறிவாலும் தப்லீகாலும் எந்தப் பயனும் ஏற்படாது.

ஆண்களுக்கு தந்தை என்ற முறையிலும் பொறுப்பு உள்ளது. அதனையும் புரிந்து கொள்வது அவசியமாகும். பிள்ளைகளுக்கு தர்பிய்யத் கொடுப்பது தாயிற்கு மட்டும்தான் பொறுப்பு என்று நினைத்து விட வேண்டாம். தந்தையர்களும் கூட குழந்தைகளின் தர்பிய்யத்தில் தம பங்களிப்பை செலுத்த வேண்டும்.

பிறகு தந்தையருக்கு இன்னொரு பொறுப்பு உள்ளது. பிள்ளைகளின் தர்பிய்யத்தில் செயல் பயிற்சி தருகின்ற அதே வேளையில் அவர்களுக்காக துஆ செய்வதிலும் கவனம் செலுத்துங்கள். இது மிகவும் அவசியமாகும்.

இஸ்லாம் தந்தைகளிடம் உங்கள் பிள்ளைகளுக்கு தர்பிய்யத்தின் பக்கம் கவனம் செலுத்துங்கள் என்று கூறுமிடத்தும் அவர்களுக்காக துஆ செய்யுங்கள் என்று கூறுமிடத்து பிள்ளைகளுக்கும் அது கட்டளையிடுகிறது. அதாவது உங்களுக்கும் சில கடமைகள் உள்ளன. நீங்கள் பருவ வயதை அடைந்தால் பெற்றோருக்காக உங்களுக்கும் சில கடமைகள் உள்ளன. அதை நீங்கள் செய்ய வேண்டும். உறவுகளின் கண்ணிகளை ஒன்றுடன் ஒன்று இணைப்பதன் மூலம் அமைதி நிறைந்த சமூகத்தை உருவாக்க முடியும்.

எவ்வாறிருப்பினும் பல்வேறு நிலைகளில் ஓர் ஆணுக்கு பல பொறுப்புகள் உள்ளன. அதனை நிறைவேற்ற முயற்சி செய்ய வேண்டும். தமது வீடுகளை அன்பு, நேசம் எப்போதும் நிலைத்திருக்கும் இடமாக ஆக்க முயற்சி செய்ய வேண்டும். ஓர் ஆண் கணவனாகவும் இருக்கிறார். தந்தையாகவும் இருக்கிறார். மகனாகவும் இருக்கிறார். இந்த அடிப்படையில் அவர் தனது பொறுப்புகளைப் புரிய வேண்டும். இன்னும் நிறைய நிலைகள் ஓர் ஆணுக்கு உள்ளன. ஆனால் இந்த மூன்று நிலைபாடுகளை நான் விளக்கினேன்.

திருக்குர்ஆன், நபிமொழிகள், ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் கட்டளைகள் மற்றும் அவர்களின் முன்மாதிரி ஆகியவற்றின் ஒளியில் ஆண்களுக்கு மிகவும் முக்கியம் வாய்ந்த பொன்னான போதனைகளை ஹுஸூர் அவர்கள் எடுத்துக் கூறினார்கள்.

**சய்யிதுனா அமீருல் முஃமினீன் ஹஸ்ரத் மிர்ஸா மஸ்ரூர் அஹ்மது ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ்**

(அய்யதஹுல்லாஹுத்தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்) அவர்கள் **இலண்டன் மார்டனிலுள்ள பைத்துல் ஃபுதூஹ் பள்ளிவாயிலில்**

**19 மே 2017** அதாவது ஹிஜ்ரி ஷம்ஸி 1395 -ஆம் ஆண்டு **ஹிஜ்ரத்** மாதம் **19 -ஆம் தேதி** ஆற்றிய **ஜுமுஆ பேருரை**

أَشْهَدُ أَنْ لَّا إِلٰهَ إِلَّا اللّٰهُ وَحْدَهٗ لَا شَرِيْكَ لَهٗ وَأَشْهَدُ أَنَّ مُحَمَّدًا عَبْدُهٗ وَرَسُوْلُهٗ
أَمَّا بَعْدُ فَأَعُوْذُ بِاللّٰهِ مِنَ الشَّيْطٰنِ الرَّجِيْمِ۔ بِسْمِ اللّٰهِ الرَّحْمٰنِ الرَّحِيْمِ
اَلْحَمْدُ لِلّٰهِ رَبِّ الْعٰلَمِيْنَ۔ الرَّحْمٰنِ الرَّحِيْمِ۔ مٰلِكِ يَوْمِ الدِّيْنِ۔ إِيَّاكَ نَعْبُدُ
وَإِيَّاكَ نَسْتَعِيْنُ۔ اِهْدِنَا الصِّرَاطَ الْمُسْتَقِيْمَ۔ صِرَاطَ الَّذِيْنَ أَنْعَمْتَ عَلَيْهِمْ
غَيْرِ الْمَغْضُوْبِ عَلَيْهِمْ وَلَا الضَّآلِّيْنَ۔

இஸ்லாத்தின் போதனை ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் மீது இறங்கியது. அது ஒவ்வொரு விஷயத்திலும் நமக்கு வழிகாட்டுகிறது. நம்மில் ஒவ்வொருவரும் இந்த வழிகாட்டலின்படி செயல்படுபவர் –களாகி விட்டால் ஓர் அழகிய சமூகம் உருவாக முடியும். இன்று முஸ்லிம் அல்லாத உலகம் இஸ்லாத்தின் மீதும் முஸ்லிம்களின் செயலின் மீதும் ஆட்சேபணை செய்கிறது. இஸ்லாத்தின் போதனையின் மீது சரியாக செயல்படுவதன் மூலம் இம்மக்கள் அந்த ஆட்சேபணைக்குப்பதில், முஸ்லிம்களின் முன்மாதிரியைப் பார்த்து விட்டு இஸ்லாத்தின் கொள்கையை ஏற்பவராகி விடுவர். ஆனால், துரதிஷடவசமாக முஸ்லிம்களில் பெரும்பாலார் அல்லாஹ்வுடைய இந்தக் கட்டளையைப் படிக்கின்றார்கள்தான். இதனை பெரும் மரியாதை கொண்டு பார்க்கவும் செய்கின்றனர். ஆனால் அதன்படி செயல்படும்போது அதனை அலட்சியம் செய்யப்படுகிறது.

திருக்குர்ஆனில் எண்ணற்ற கட்டளைகள் உள்ளன. ஆனால் இவை அனைத்தும் அல்லாஹ் ஓரிடத்தில் ஒரே வாக்கியத்தில் ஒன்றிணைத்து விட்டான். அதாவது لَقَدْ كَانَ لَكُمْ فِيْ رَسُوْلِ اللّٰهِ أُسْوَةٌ حَسَنَةٌ நிச்சயமாக உங்களுக்கு அல்லாஹ்வுடைய ரஸூலிடம் நல்ல முன்மாதிரி உள்ளது (33:22) என்று அவன் கூறுகின்றான்.

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களது முழு வாழ்வும், வீட்டிலிருந்து சமூகத் தொடர்பு வரை திருக்குர்ஆனின் எல்லா கட்டளைகளின்படியும் அமல் செய்வதாக இருந்தது. ஆகவே உண்மையான வெற்றி நாம் எல்லா விவகாரத்திலும் இந்த முன்மாதிரியைக் கண்முன் வைக்கும்போதுதான் ஏற்பட முடியும். சிலவேளை மனிதன் பெரும் பெரும் விவகாரங்களில் மிக நல்ல முன்மாதிரி காட்டுபவனாக இருக்கிறான். ஆனால் வெளிப்படையாக சிறியதாகத் தெரிகிற விஷயமானது அதற்கு எந்த முக்கியத்துவம் இல்லாதது போன்று அலட்சியம் செய்யப்படுகிறது. இதற்கு நேர் எதிரில் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் தமது வழிகாட்டலில் முன்மாதிரியிலும் நமக்கு மிகவும் கவனமூட்டியுள்ளார்கள். ஆகவே நாம் நமது வாழ்வை அமைதி நிறைந்ததாக ஆக்க

விரும்பினால் நாம் அல்லாஹ் உடைய அருள்களைப் பெற விரும்பினால் நாம் அதே நல்லொழுக்கங்களை நமது வாழ்வில் அங்கமாக்க வேண்டிய அவசியம் உள்ளது. அது நமது எஜமானரும் வழிகாட்டியுமான ஹஸ்ரத் முஹம்மது முஸ்தஃபா (ஸல்) அவர்கள் ஒவ்வொரு விவகாரத்திலும் நம்முன் எடுத்து வைத்ததாகும்.

பிறகு இக்காலத்தில் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுடைய உண்மையான அடியார் அதனை தெளிவாக நம்முன் வைத்தார்கள். அதன் பக்கம் செயல்படுவதன் பக்கம் கவனமூட்டினார்கள். இப்போது நான் இது தொடர்பாக பல்வேறு நிலைகளில் ஆண்களின் பொறுப்புகள் சம்பந்தமாக எடுத்து வைப்பேன். வீட்டில் தலைவர் என்ற முறையிலும் ஆணுக்கு பொறுப்பு இருக்கிறது. ஆணுக்கு கணவர் என்ற முறையிலும் பொறுப்புகள் இருக்கின்றன. ஆணுக்கு தந்தை என்ற முறையிலும் பொறுப்புகள் இருக்கிறது. சந்ததிகள் என்ற அடிப்படையிலும் பொறுப்புகள் உள்ளன. ஒவ்வோர் ஆணும் பொறுப்புகளைப் புரிந்து கொண்டால், அதனை நிறைவேற்ற முயன்றால் அதுவே சமூகத்தின் பரந்த அளவிலான அமைதியை நிலைநாட்டவும், அன்பு, சகோதரத்துவத்தை நிலைநாட்டும் வழியாகவும் ஆகி விடும். இதுவே சந்ததிகளின் தர்பிய்யத்திற்கு வழியாக ஆகி முழு அமைதியுடன் மனித உரிமையை நிலைநாட்டக் கூடிய சந்ததிகள் பரவுவதற்கும் அது காரணியாக அமைந்து விடுகிறது. வீடுகளின் அமைதி இதனால் நிலைநாட்டப்படுகிறது. இக்காலத்தில் பல வீடுகளின் விவகாரங்கள் மற்றும் புகார்கள் வருகின்றன. ஆண்கள் தம்மை வீட்டின் தலைவர் என்று கருதியவாறு எனக்கே எல்லா உரிமை -களும் உள்ளன என்று கூறி தமது மனைவியையும் மதிப்பதில்லை. அவர்களுக்கு அனுமதிக்கப்பட்ட உரிமைகளை வழங்குவதில்லை. சந்ததிகளின் தர்பிய்யத்தின் உரிமையைத் தருவதும் இல்லை. பெயருக்கு மட்டுமே தலைவராக இருக்கிறார். இன்னும் சொல்வதென்றால், இந்தியாவிலிருந்தும் பாகிஸ்தானிலுள்ள சில பெண்களின் தரப்பிலிருந்தும் புகார்கள் வருகின்றன. கணவர்கள் தமது மனைவியை அடித்து அடித்து உடலை நீல நிற அடையாளம் கொண்டதாக ஆக்கி விடுகின்றனர் அல்லது காயப்படுத்தி விடுகின்றனர் அல்லது அவர்களது முகம் இதனால் வீங்கி விடுகிறது.

இன்னும் சொல்வதாயின், சிலர் இந்த நாடுகளிலிருந்தும் கூட இத்தகைய சில செயல்களைச் செய்கின்றனர். தந்தை தமது ஆண் பிள்ளைகளிடமும் பெண் மக்களிடமும் அநீதியிழைக்கின்றனர். சில தந்தையர்கள் எப்படி நடந்து கொள்கின்றனர் என்றால் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களை ஏற்றுக் கொண்ட பிறகும் கூட (பிற) மக்களைப் போன்றும், மார்க்கத்தைப் பற்றி அறிவே இல்லாத முஸ்லிம்களைப் போன்றும் இருக்கின்றனர் என்றால், தமது மனைவி மக்களுடன் அறிவற்றவர்களைப் போன்று அறிவீனமான செயல்களைச் செய்கிறார்கள் என்றால் தமது நிலைகளை மாற்றிக் கொள்வதாக உறுதிமொழி எடுத்த பிறகும் அவர்களிடம் மாற்றம் ஏற்படாமல் இருந்தால் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களிடம் பைஅத் செய்ததனால் அவர்களுக்கு எந்தப் பயனும் இல்லை.

ஆண்கள், அவர்கள் இறைவனின் கடமையை நிறைவேற்றும் பொறுப்பையும், தமது செயலின் நிலையை உயர்த்தும் பொறுப்பையும் நிறைவேற்றும் கடமையை செலுத்துகிறார்களா? அவர்கள் அதனை நிறைவேற்றினார்கள் என்றால் அவர்களின் வீடுகளில் அநீதியிழைக்கப்படவே முடியாது. ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் எல்லாருக்கும் முதலில் வீட்டின் தலைவர் என்ற முறையில் தவ்ஹீதை நிலைநாட்டுதலின் முக்கியத்துவத்தை தமது சந்ததிகளிடம் தெளிவுபடுத்தி அதனை செயல்பட வைத்தார்கள். ஆனால் இந்த பணியையும் அன்பு நேசத்துடன் செய்ய வைத்தார்கள். உருட்டி மிரட்டியல்ல. ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் வீட்டின் தலைவராக இருப்பதும், உலகின் சீர்திருத்தம் மற்றும் ஷரீஅத்தினை நிலைநாட்டுவதற்கான எல்லா விதமான வேலைகளெல்லாம் இருந்தும் தமது வீட்டினரின் உரிமைகளையும் நிறைவேற்றினார்கள். அன்பு, நேசம், மென்மையுடன் இந்த உரிமையை நிறைவேற்றினார்கள். வீட்டின் தலைவர் என்ற கடமையை எந்த அளவுக்கு நிறைவேற்றினார்கள் என்றால் முதலில் தவ்ஹீதை நிலைநாட்டும் முதல் பொறுப்பைப் பற்றி கவனமூட்டினார்கள். அதாவது அல்லாஹ்வுக்கு இபாதத் செய்தல் என்ற உணர்வை குடும்பத்தில் உள்ளவர்களிடம் ஏற்படுத்தினார்கள்.

இந்த வகையில் ஹஸ்ரத் ஆயிஷா (ரலி) அவர்கள் கூறுகின்றார்கள்: இரவில் அவர்கள் நஃபில் தொழுவதற்காக எழுந்திருப்பார்கள். சுபுஹ் தொழுகைக்கு முன்னர் தண்ணீர் துளிகளைத் தெளித்து எழுப்புவார்கள். நஃபில் தொழுங்கள். அல்லாஹ்வுக்கு இபாதத் செய்யுங்கள். அல்லாஹ்வுக்குரிய உரிமையை நிறைவேற்றுங்கள் என்று கூறுவார்கள். (ஸஹீஹ் புகாரி கிதாபுல் வித்ர் பாபு அய்காஸன்னபீ ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அஹ்லஹு பில் வித்ரி ஹதீஸ் 997 - சுனன் அபீ தாவூது கிதாபுஸ் ஸலாத்தி பாபு கியாமுல்லைலி ஹதீஸ் 1308) பிறகு தமது வீட்டினரின் உரிமையை எவ்வாறு நிறைவேற்றினார்கள்? எந்தப் பணிகளை அவர்களது மனைவியர் செய்ய வேண்டியதிருந்ததோ அதிலும் அவர்களுக்கு கை கொடுத்தனர்.

இந்த வகையில் ஹஸ்ரத் ஆயிஷா (ரலி) அவர்கள் கூறுகின்றார்கள்: எவ்வளவு நேரம் கிடைக்குமோ அந்த அளவுக்கு வீட்டினருக்கு பணிவிடை செய்வதில் மூழ்கியிருப்பார்கள். தொழுகையின் அழைப்பு வந்து விட்டால் பள்ளிவாயிலுக்குச் சென்று விடுவார்கள். (ஸஹீஹ் புகாரி கிதாபுல் அஸான் பாபு மன் கான ஃபீ ஹாஜதி அஹ்லிஹி ஹதீஸ் 678) அன்னாரின் இந்த முன்மாதிரியை நாம் பின்பற்ற வேண்டும். அநீதிக்கு சமமான ஒரு நடைமுறையை மனைவிகளுடன் காட்டக் கூடாது.

ஹஸ்ரத் ஆயிஷா (ரலி) அவர்கள் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுடைய வீட்டு வேலைகளைப் பற்றி எடுத்துக் கூறும்போது மேலும் கூறுகிறார்கள்: அவர்கள் தமது ஆடைகளை தாமே தைத்துக் கொள்வார்கள். காலணிகளை சரிசெய் -வார்கள். வீட்டின் தோல் பைகளை சீர்செய்வார்கள். (உம்ததுல் காரி ஷரஹ் ஸஹீஹ் புகாரி கிதாபு மவாகீத்துஸ் ஸலாத்தி பாபு மன் கான ஃபீ ஹாஜதி அஹ்லிஹி... ஹதீஸ் 676 தொகுதி 5 பக்கம் 296. பைருத்திலுள்ள தாரே அஹ்யா யித்துராஸில் அரபி அச்சகத்தில் வெளியிடப்பட்டது) இந்த முன்மாதிரிகளை கண்முன் வைத்தவாறு பெரும்பாலான கணவன்மார்கள் தம்மை கணக்கிட வேண்டும். இதன் பக்கம் கவனம் செலுத்த வேண்டும். இதுமாதிரியான நடைமுறை தமது வீட்டில் உள்ளதா? என்று பார்க்க வேண்டும்.

ஹஸ்ரத் அபூஹுரைரா (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள். தமது சஹபாவுக்கு கணவன் -மார்களின் கடமைகள் மற்றும் நடைமுறைகளைப் பற்றி ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் ஓரிடத்தில் கூறினார்கள்: முஃமின்களின் முழுமையான ஈமான் என்பது எவரது நல்லொழுக்கம் சிறந்ததாக உள்ளதோ அவருடையதேயாகும். உம்மிடத்தில் நல்லொழுக்கத்தின் அடிப்படையில் சிறந்தவர் தனது பெண்களின் விஷயத்தில் சிறந்தவரே ஆவர். (சுனன் திர்மிதி அப்வாபுர்ரிஸா. பாபு மா ஜாஅ ஃபீ ஹக்கில் மர்அதி அலா ஸவ்ஜிஹா ஹதீஸ் 1162)

ஆகவே, எவருக்கு அவருடைய மனைவியிருடன் நல்ல நடைமுறையில்லையோ அவர்கள் ஆய்வு செய்ய வேண்டும். மனைவியருடன் நல்ல நடைமுறையை வெளிப்படுத்துவது என்பது வெறுமனே வெளிப்படையான நற்செயல் மட்டுமல்ல.

அவர்கள் கூறுகின்றார்கள்: ஈமானின் தரத்தின் உயர்வுக்கும் அடையாளமாகும்.

ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கணவருடைய கடமைகள், மனைவியருடன் நன்னடத்தை காட்டுவது சம்பந்தமாக கூறுகின்றார்கள்: பெண்களின் மானக்கேடான செயல்களைத் தவிர வேறு அனைத்து பக்குவமற்ற குணங்களையும் கசப்புகளையும் சகித்துக் கொள்ள வேண்டும்.

அவர்கள் கூறுகின்றார்கள்: ஆண்களாக இருந்து கொண்டு பெண்களுடன் சண்டை போடுவதை முழுமையான வெட்கம் கெட்ட செயலாக நாம் அறிகிறோம். இறைவன் நம்மை ஆணாக ஆக்கி -யுள்ளான். இது நம்மைப் பொருத்த வரை அருள்களை முழுமையாக்குவதாகும். அதற்குரிய நன்றி செலுத்துதல் நாம் பெண்களுடன் மென்மையுடனும் பரிவுடனும் நடந்து கொள்ள வேண்டும் என்பதாகும்.

ஒருமுறை ஒரு நண்பர் தீய வார்த்தையைப் பேசுவது பற்றிய பேச்சு வந்தது. அவர் தமது மனைவியுடன் மிகக் கடுமையாக நடந்து கொள்கிறார் என்று கூறப்பட்டது. அதனைக் கேட்டு ஹுஸூர் (அலை) அவர்கள் மிகவும் கவலை அடைந்தார்கள். பிறகு நமது சகோதரர்கள் அவ்வாறு இருக்கக் கூடாது என்று அவர்கள் கூறினார்கள்.

ஒருவர் எழுதுகிறார்: ஹுஸூர் (அலை) அவர்கள் மிகவும் நீண்ட நேரம் வரை பெண்களுடன் நடந்து கொள்ளும் விதம் குறித்து பேசிக் கொண்டிருந் -தார்கள். இறுதியில் கூறினார்கள்: எனது நிலை என்னவென்றால் ஒருமுறை நான் எனது மனைவி இடம் உரத்த குரலில் பேசி விட்டேன். இந்த உரத்த சப்தத்தில் உள்ளத்தின் கவலை கலந்துள்ளது என்பதை உணர்ந்தேன். உரத்த குரலில் பேசி விட்டு உள்ளத்தின் கவலை இதில் சேர்ந்துள்ளது என்று உணர்ந்தார்கள். அதே வேளையில் உள்ளத்தை வருத்தும் சொற்கள் எதுவும் நாவில் இருந்து வந்து விடவில்லை. கடுமையான வார்த்தை எதனையும் வாயிலிருந்து வெளிப்படுத்தவில்லை. இருந்தும் கூட மிகவும் இஸ்திக்ஃபார் செய்து கொண்டிருந்தேன். மிகவும் அச்சத்துடன் நஃபில் தொழுதேன். சிறிது ஸதகாவும் தந்தேன். இவ்வாறு மனைவியுடன் நடந்து கொண்டது கூட ஏதாவதொரு பாவச்செயலின் மறைமுகமான விளைவாக இருக்கலாம் என்று கருதினேன் என்றார்கள். (மல்ஃபூஸாத் தொகுதி 2 பக்கம் 1-2; 1985 ஆம் ஆண்டு பதிப்பு - இங்கிலாந்தில் அச்சடிக்கப் -பட்டது) இதுவே அன்னாரின் முன்மாதிரியாகும்.

பிறகு ஒரு நண்பர் கடுமையாக நடந்து கொண்டதற்காக அன்னார் மிகவும் வேதனையையும் கவலையையும் வெளிப்படுத்தினார்கள். போதனையும் செய்தார்கள். எவர்கள் சின்னஞ்சிறு விஷயங் -களுக்காக தமது மனைவியுடன் சண்டை சச்சரவு செய்கிறார்களோ கையை உயர்த்துகிறார்களோ அவர்கள் சிந்திக்க வேண்டும். கையை உயர்த்துவது ஒருபுறமிருக்கட்டும். நான் ஏற்கனவே கூறியது போன்று காயமாக்கியும் கூட விடுகின்றனர். அவர்களுக்கு இது மிகவும் கவலையளிக்கும் தருணமாகும். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களைப் பொருத்தவரை பிறகு அவர்களது ஈமானும் முழுமையானது இல்லை. அவர்கள் தமது ஈமானைப் பற்றி கவலைப்பட வேண்டும். இதனால் தான் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுடைய வழிகாட்டலும் இருந்தது. ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களுக்கும் அந்த கவலை இருந்தது. எவரது ஈமானின் தரம் உயர்ந்ததாக இல்லையோ அவர் ஏதாவது ஓரிடத்தில் தடுமாற வாய்ப்பு உள்ளது. ஆகவே ஏற்கனவே கூறியதுபோன்று வெளிப்படையாக இது சிறியதாகத் தெரியும் விஷயமாகும். ஆனால் அது சிறியதல்ல. இந்த நாடுகளில் போலீஸ் வரை விவகாரம் போய் விடுகிறது. ஜமாஅத்திற்கு அவப்பெயர் ஏற்படுகிறது. பிறகு அத்தகையோர் உலகியல்

தண்டனைகளையும் பெறுகிறார்கள். அல்லாஹ்வின் கோபத்தின் முத்திரையையும் பெறுகிறார்கள்.

பெண்களிடம் இன்னின்ன தீமைகள் இருக்கின்றன. இதனால் நாங்கள் கடுமை காட்ட வேண்டியது வந்தது என்று சிலர் கூறுகின்றனர். இந்தக் கோணத்தில் முதலில் ஆண்கள் தம்மை ஆய்வு செய்ய வேண்டும். அவர்கள் தாம் மார்க்கத்தின் தரத்தை முழுமையாக மேற்கொள்கிறார்களா? ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் அத்தகைய ஆண்களுக்கு போதனை செய்தவாறு கூறுகின்றார்கள்: ஆண்கள் நல்லவர்களாக இல்லாதபோது பெண் எப்போது சாலிஹா – நல்லடியாள் ஆகப் போகிறார். முதல் நிபந்தனை ஆண்கள் முதலில் நல்லவராக இருக்க வேண்டும். பிறகு அவர்களது மனைவியும் நல்லடியாராக இருப்பர். ஆண்கள் தாம் முதலில் நல்லடியாராக ஆகி விட்டால் பிறகு பெண்களும் நல்லடியாள் ஆகி விடுவர்.

அவர்கள் கூறினார்கள்: வார்த்தைகளில் போதனை செய்யக் கூடாது. மாறாக செயலினால் போதனை செய்யப்பட்டால் அதற்கு தாக்கம் ஏற்படுகிறது. வார்த்தைகளினால் போதனை செய்யாதீர்கள். அதட்டினால் மட்டும் போதாது. மாறாக உங்கள் செயல் மூலமாக நீங்கள் நல்லவர் என்று நிரூபித்துக் காட்டுங்கள். உங்கள் ஒவ்வோர் அடியும் இறை கட்டளையின்படி எடுத்து வைக்க வேண்டும். பிறகு அதற்கு தாக்கம் ஏற்படும்.

அவர்கள் கூறினார்கள்: பெண்கள் என்ன? எவர்தான் வெறும் வார்த்தைகளை மட்டும் ஏற்றுக் கொள்ளப் போகிறார்? எவரும் செயல் இல்லாமல் ஏற்க மாட்டார்.

ஆண் ஒரு கோணல் தன்மையை குறையை தமக்குள் வைத்திருக்கிறார் எனில் பெண்கள் எப்போதும் அதற்கு சாட்சியாக இருப்பர். இறைவனுக்கு ஒருவர் தானே பயப்படாமல் இருக்கும்போது அந்த பெண் எப்படி பயப்படுவாள்? அத்தகைய மவ்லவிகளின் வார்த்தையும் தாக்கத்தை ஏற்படுத்தாது. கணவரின் வார்த்தையும் தாக்கத்தை ஏற்படுத்தாது. ஒவ்வொரு நிலையிலும் செயல் முன்மாதிரியே தாக்கத்தை ஏற்படுத்தும்.

அவர்கள் கூறுகிறார்கள்: கணவர் இரவில் எழுந்து எழுந்து துஆ செய்கிறார்; அழுகிறார் எனில் பெண் ஓரிரு நாள் பார்ப்பாள். ஒருநாள் அவளுக்கும் எண்ணம் வரும். நிச்சயமாக தாக்கத்திற்குள்ளாவாள்.

அவர்கள் கூறுகிறார்கள்: தாக்கத்தை ஏற்கும் மூலதாரம் பெண்களிடம் அதிகமாக இருக்கிறது. அவர்களை சரிசெய்வதற்கு எந்தப் பாடசாலையும் போதுமானதில்லை. எந்தப் பள்ளிக்கூடத்தின் தேவையும் இல்லை. எந்த அமைப்பின் தேவையும் இல்லை. ஒரு ஆணின் முன்மாதிரி ஏற்படுத்துகிற தாக்கத்தை வேறெதுவும் ஏற்படுத்த முடியாது. சரிசெய்ய வேண்டும் என்றால் கணவர் தன்னை சீர்திருத்த வேண்டும். நல்ல முன்மாதிரி காட்ட வேண்டும். அப்போது அவர்களும் திருந்தி விடுவர்.

அவர்கள் கூறுகிறார்கள்: அல்லாஹ் ஆணையும் பெண்ணையும் ஒரே இருப்பாக ஆக்கியுள்ளான். தீய விஷயங்களில் பெண்களுக்கு தம்மை அடியொற்றி நடக்கும் ஒரு வாய்ப்பை தருவது ஆண்களின் அநீதியாகும்.

இன்ன தீமையை இவர் செய்கிறார் என்று ஒரு பெண் சொல்வதற்கு ஒருபோதும் வாய்ப்பு தராதீர்கள். உங்களிடம் இன்ன தீமை உள்ளது என்று பெண் சுட்டிக் காட்ட வாய்ப்பே தரக்கூடாது. மாறாக, மனிதன் எந்த அளவு தூய்மையாக இருக்க வேண்டும் என்றால் பெண்கள் எந்த அளவுக்கு துருவினாலும் ஆண்களிடம் எந்த தீமையும் தென்படக் கூடாது. அப்போது அவர்களுக்கு மார்க்க உணர்வு ஏற்படும். அந்நிலையில் பெண்கள் மார்க்கத்தை புரிந்து கொள்கிறார்கள். (மல்ஃபூஸாத் தொகுதி 5 பக்கம் 207-208; 1985 ஆம் ஆண்டு பதிப்பு - இங்கிலாந்தில் அச்சடிக்கப்பட்டது)

ஆட்சேபணை செய்வதற்கு எந்த தீமையும் தென்படாத நிலையில் பெண்கள் மார்க்க உணர்வு இல்லாதவளாக இருப்பினும் மார்க்கத்தின் பக்கம் கவனம் உருவாகும். இங்கு பார்த்துள்ளேன். சில பெண்கள் அதிக மார்க்க உணர்வுள்ளவர்கள் ஆவர். சில வேளைகளில் அவர்கள், எமது கணவருக்கு மார்க்கத்தின் பக்கம் கவனம் இல்லை என்று புகார் கூறுகிறார்கள். தமது பைஅத்தில் வந்த ஆண்களிடம் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களுடைய எதிர்பார்ப்புகள் என்ன என்றும் ஒருபுறம் பார்க்கிறோம். மறுபுறம் அதிகமாக ஆண்களைப் பற்றி பெண்கள் புகார் கொண்டு வருகிறார்கள். எமது கணவர் தொழுகையில் சோம்பல் காட்டுபவராக இருக்கிறார். ஜமாஅத்துடன் தொழுகை ஒருபுறம் இருக்கட்டும். வீட்டில் கூட தொழுவதில்லை. மார்க்க அறிவு ஆண்களிடம் பலவீனமாக உள்ளது. சந்தா விஷயத்தில் பல வீடுகளில் ஆண்கள் பலவீனமாக இருக்கிறார்கள். டி.வி –யில் வீணான நிகழ்ச்சிகளைப் பார்க்கிறார்கள் என்றும் பெண்களிடம் இருந்து புகார்கள் வருகின்றன. சிறுவர்களுக்கு தர்பிய்யத் கொடுப்பதில் ஆண்களுக்கு கவனமேயில்லை என்றும் பெண்கள் புகார் தெரிவிக்கின்றனர். வீட்டின் தலைவராக முயற்சி செய்கிறார் எனில் தந்தை ஆவதற்கு முயற்சி செய்வார்கள் எனில் அவர்களிடம் அடி, உதை சப்தம், கண்டிப்பு தவிர வேறு எதுவும் இருப்பதில்லை. ஆண்கள் பெண்களுக்கு கற்றுக் கொடுப்பதற்குப் பகரமாக பல வீடுகளில் பெண்கள் தான் ஆண்களுக்கு கற்றுக் கொடுப்பவர்களாக இருக்கின்றனர் அல்லது அவர்களுக்கு கவனமூட்டு –கின்றனர். பிள்ளைகள் தடம் புரளாமல் இருக்க வேண்டும் என்பதற்காக அவ்வாறு செய்கிறார்கள். எந்த வீடுகளில் பிள்ளைகள் கவனமின்மைக்கு இரையாகி உள்ளார்களோ அங்கு மனைவி குழந்தைகள் மீது அளவற்ற கடுமை காட்டுதலும் காணப்படுகிறது. சில வேளைகளில் பிள்ளைகளே முன் வந்து புகார் செய்கிறார்கள். தாயாருடன் எமது தந்தையர் நடந்து கொள்ளும் முறை நன்றாக இல்லை என்கின்றனர். வீடுகளை அமைதி நிறைந்ததாக ஆக்க வேண்டும் என்றால், அடுத்த தலைமுறைக்கு தர்பிய்யத் வழங்க வேண்டும் என்றால் அவர்களை மார்க்கத்துடன் தொடர்புள்ளவர்களாக ஆக்க வேண்டும் என்றால் ஆண்கள் தமது நிலைமைகளை கவனிக்க வேண்டும்.

ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் ஆண்களுக்கு கவனமூட்டியவாறு மேலும் கூறுகின்றார்கள்: ஆண் தமது வீட்டின் இமாம் ஆக இருக்கிறார். எந்த அளவுக்கு தீய தாக்கத்தை ஏற்படுத்த முடியுமோ அந்த அளவுக்கு தாக்கத்தை ஏற்படுத்துகிறார். பிறகு அத்தீய தாக்கம் அடுத்த சந்ததிகளிடமும் வளர்ந்து கொண்டே செல்லும்.

அவர்கள் கூறினார்கள்: ஆண்கள் தமது ஆற்றல்களை உரிய இடத்தில் பயன்படுத்த வேண்டும். உதாரணமாக, கோபத்தின் ஆற்றல். அது நடுநிலையைத் தாண்டி விட்டால் பைத்தியத்தின் முந்தைய நிலையாகி விடுகிறது. மனித இயல்பில் கோபம் உள்ளது. ஆனால் அது அளவுக்கு மீறி விட்டால் பிறகு அது பைத்தியமாகி விடுகிறது.

அவர்கள் கூறுகிறார்கள்: பைத்தியத்திற்கும் இதற்கும் சிறு வித்தியாசம்தான் உள்ளது. எம்மனிதர் கடும் கோபம் உள்ளவராக இருப்பாரோ அவரிடமிருந்து ஞானத்தின் ஊற்று பறிக்கப்படுகிறது. இன்னும் சொல்வதாயின், ஒருவர் எதிரியாக இருந்தால் அவரிடம் கூட அதிகமாக கோபத்தால் மிகைக்கப்பட்டவராகி உரையாட வேண்டாம். (மல்ஃபூஸாத் தொகுதி 5 பக்கம் 208; 1985 ஆம் ஆண்டு பதிப்பு - இங்கிலாந்தில் அச்சடிக்கப்பட்டது) வீட்டு விவகாரம் ஒருபுறமிருக்கட்டும். எதிரிகளிடம் கூட இப்படி கோபப்பட்டு பேசக் கூடாது.

ஆகவே இதுவே வீட்டில் மனைவி மக்களின் மீது கோபம் கொள்வதின் தரமாகும். இந்த கோபம் ஒருபுறமிருக்கட்டும். ஒருவர் எதிரியாக இருந்தால் கூட அவரிடம் கூட கடுங்கோபத்துடன் அறிவிழந்தவாறு பேசக் கூடாது. எதிரிகளின் பேச்சை மறுப்பதற்காக நம்பிக்கையாளரிடமிருந்து அசுத்தம் நிறைந்த சொற்கள் கோபத்தால் நிறைந்திருக்கும் சொற்கள் வாயில் வெளிப்படக் கூடாது. நான் முன்னர் கூறியதுபோன்று இந்தியா மற்றும் பாகிஸ்தானில் மனைவியர் தமது கணவன்மாரைக் குறித்து எழுதுகின்றனர். காதியானிலும் பாகிஸ்தானிலும் நஸாரத் இஸ்லாஹ் வ இர்ஷாத் மற்றும் கிளை அமைப்புகள் இதன் பக்கம் கவனம் செலுத்த வேண்டும். எஞ்சிய உலகிலும் சரி தமது தர்பிய்யத் நிகழ்ச்சிகளில் அதிக கவனம் செலுத்த வேண்டும். தப்லீக் செய்கிறார்கள். மார்க்க விவகாரங்களைக் கற்கிறார்கள். ஆனால் வீட்டில் நிம்மதியின்மை இருந்தால் அந்த அறிவாலும் தப்லீகாலும் எந்தப் பயனும் ஏற்படாது.

பெண்களின் மனங்கள் எவ்வாறு ஆண்களைப் பார்க்கிறது என்பதனை விளக்கியவாறு ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறுகிறார்கள்: ஆண்களின் எல்லா விவகாரங்களையும் பண்பு –களையும் பெண்கள் பார்க்கிறாள். எனது கணவரிடம் தக்வாவின் இன்னின்ன பண்புகள் காணப்படுகின்றன என்று பார்க்கிறாள். உதாரணமாக, சகிப்புத்தன்மை, பொறுமை இவற்றைப் பற்றி ஆண்களிடம் பரிசீலிக்கும் வாய்ப்பு பெறுகிறாள். இந்த வாய்ப்பு மற்றவருக்கு கிடைப்பதில்லை. பெண் தினமும் வீட்டில் பார்க்கிறாள். எனவே பெண்ணை திருடி என்று கூறுகிறார்கள். ஏனெனில் அவள் உள்ளுக்குள்ளேயே நல்லொழுக்கத்தை திருடிக் கொண்டிருக்கிறாள். எந்த அளவுக்கு என்றால் எல்லா நல்லொழுக்கத்தையும் பெற்று விடுகிறாள்.

அவர்கள் கூறுகிறார்கள்: ஒருமுறை ஒருவர் கிறித்தவரானார். இஸ்லாத்தை விட்டு விட்டார். பெண்ணும் கூட அவருடன் சேர்ந்து கிறித்தவளாகி விட்டாள். அன்னியருடன் சந்தித்தாள். சில காலத்திற்குப் பிறகு கணவர் மீண்டும் இஸ்லாத்தின் பக்கம் கவனம் செலுத்தினார். நாம் தவறு செய்து விட்டோம். இஸ்லாத்தை விட்டு விட்டோம் என்ற எண்ணம் வந்தது. மீண்டும் இஸ்லாத்திற்கு திரும்ப வந்து விடு என்றார். அவள் கூறினாள்: நான் முஸ்லிமாவது சிரமம். குடி மற்றும் சுதந்திரமாக செயல்படுவது போன்ற பழக்கங்கள் மற்றும் சில சுதந்திரங்கள் என்னிடம் அதிகமாகி விட்டன. இவற்றை என்னால் விட முடியாது. (மல்ஃபூஸாத் தொகுதி 5 பக்கம் 208-209; 1985 ஆம் ஆண்டு பதிப்பு - இங்கிலாந்தில் அச்சடிக்கப்பட்டது)

ஒரு மனிதன் இஸ்லாத்தை விட்டு விலகி விட்டால் கிறித்தவத்தின் பக்கம் செல்ல எண்ணம் வந்து விட்டது. இது அதிகபட்ச நிலையாகும். பெரும்பாலான ஆண்கள் அவ்வாறுதான் உள்ளனர். அவர்கள் இஸ்லாத்தை விடுவதில்லை. பெயரளவில் இஸ்லாத்துடன் தொடர்பு வைத்துள்ளனர். தம்மை முஸ்லிம் என்ற கூறுகின்றனர். சுதந்திரம் என்ற பெயரில் பல தவறான செயல்களால் பீடிக்கப்பட்டு –கின்றனர். நான் ஏற்கனவே கூறி வந்துள்ளேன். பிறகு அவர்களைப் பார்த்து அல்லது ஆண்கள் கூறியதற்கிணங்க பெண்களும் கூட சுதந்திரத்தின் பெயரால் இதே சூழலில் சிக்கி விடுகிறார்கள். சிறிது காலத்திற்குப் பிறகு மனைவி மிகவும் சுதந்திரமாகி விட்டாள் என்று ஆண்களுக்கு எண்ணம் வருகிறது. அந்த சுதந்திரத்திலிருந்து அவனை திரும்பக் கொண்டு வர அவர்கள் முயற்சி செய்கிறார்கள்.

பிறகு சண்டை ஆரம்பமாகி விடுகிறது. பிறகு ஆண் அடி உதையில் இறங்கி விடுகிறார். இங்கும் கூட இன்னும் சில சம்பவங்கள் இதனால் உருவாகி விடுகின்றன.

நான் கூறியது போன்று இந்த நாடுகளில் உடனேயே போலீஸ் நடுவில் வந்து விடுகிறது. பெண்கள், பிள்ளைகளின் உரிமைகளின் வட்டம் நடுவில் வந்து விடுகிறது. பிறகு வீடு சிதைகிறது. பிள்ளைகள் நாசமாகின்றனர். ஆகவே வீடுகள் சிதைவதற்கும், பிள்ளைகள் நாசமாவதற்கும் முன் அத்தகைய ஆண்கள் தமது பொறுப்புகளை உணர வேண்டும். தமது மனைவி மக்களுக்கு மேல் மார்க்கம் இடுகிற, இஸ்லாம் விதித்துள்ள பொறுப்புகளை உணர வேண்டும்.

பெண்களின் மீதுள்ள பொறுப்புகள் பற்றியும் அவர்களுடன் நடந்து கொள்ள வேண்டிய நடைமுறை பற்றியும் ஓரிடத்தில் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறுகிறார்கள்: பெண்களின் உரிமையை இஸ்லாம் பாதுகாத்ததுபோன்று வேறு எந்த மார்க்கமும் நிச்சயமாக பாதுகாக்கவில்லை. சுருக்கமான வார்த்தைகளில் கூறி விட்டான். வலஹுன்ன மிஸ்லுல்லஸீ அலைஹின்ன – பெண்களிடம் ஆண்களுக்கு எவ்வளவு உரிமைகள் உள்ளனவோ அந்த அளவுக்கு பெண்களுக்கும் ஆண்களிடம் உரிமைகள் உள்ளன. (2:229)

அவர்கள் கூறுகிறார்கள்: சிலரின் நிலைமைகள் கூறப்படுகின்றன. அவர்கள் அப்பாவி பெண்களை தமது காலின் செருப்பாகக் கருதுகின்றனர். இழிவான பணிகளை அவர்களை செய்ய வைக்கின்றனர். பர்தாவின் கட்டளையை எந்த அளவுக்கு அனுமதியற்ற முறையில் நடைமுறைப்படுத்துகின்றனர் என்றால் உயிருடன் புதைத்து விடுகின்றனர். அதாவது எந்த அளவுக்கு கடுமையாக கை முகங்களை மறைப்பதில் கடுமை காட்டுகின்றனர் என்றால் பெண்களுக்கு மூச்சு விடுவதும் கூட கஷ்டமாகி விடுகிறது. இந்த அளவுக்கு கடுமை காட்ட வேண்டியதில்லை. ஆனால் இஸ்லாம் மிகவும் நளினமாக நடந்து கொள்ள போதிக்கும் மார்க்கமாகும். அதே வேளையில் பெண்களும் கூட நடுநிலையைப் பேண வேண்டும். பர்தாவை எளிதாக செய்கிறோம் என்ற பெயரில் தேவையை விட அதிகமாக சுதந்திரம் எடுக்கவும் கூடாது.

இன்னும் ஒன்று பார்க்க கிடைக்கிறது. சிலர் தேவைக்கு அதிகமாகவே சுதந்திரம் ஆகி விட்டனர். பெயரளவில்தான் பர்தா இருக்கிறது. இதுவும் தவறாகும். ஆகவே பெண்கள் நினைவில் கொள்ளுங்கள். தலையையும் உடலையும் வெட்கத்தின் எதிர்பார்ப்பை நிறைவேற்றியவாறு மூடுவது அவசியமாகும். இதுவே அல்லாஹ்வின் கட்டளையாகும் என்பதை நினைவில் கொள்ள வேண்டும். கணவன் மனைவியின் தொடர்பின் தரம் எந்த அளவுக்கு இருக்க வேண்டும் என்பதை விளக்கியவாறு ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்:

கணவருக்கு மனைவியுடன் எத்தகைய தொடர்பு இருக்க வேண்டும் என்றால் இரு உண்மையான நண்பர்களுக்கு இருப்பதைப் போன்று இருக்க வேண்டும். மனிதனுடைய உயர் நல்லொழுக்கம் மற்றும் இறை தொடர்பின் முதல் சாட்சி இந்த பெண்களாகவே இருக்கின்றனர். இவர்களுடன் நல்ல தொடர்பு இல்லை என்றால் பிறகு இறைவனுடன் சமாதானமாக இருப்பது எப்படி சாத்தியமாகும்? வீட்டின் தொடர்பு சரியாக இல்லாத நிலையில் அல்லாஹ்வுடன் சமாதானமாகவும் அல்லாஹ்வின் கட்டளையின்படி செயல்படுவதும் கூட சிரமமாகும்.

அவர்கள் கூறினார்கள்: ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் கூறினார்கள்: கைருக்கு கைருக்கும் லி அஹ்லிஹீ – உங்களில் நல்லவர் தமது மனைவியுடன் நல்ல முறையில் நடந்து கொள்பவர்தான். (மல்ஃபூஸாத் தொகுதி 5 பக்கம் 417-418; 1985 ஆம் ஆண்டு பதிப்பு - இங்கிலாந்தில் அச்சடிக்கப்பட்டது)

ஆகவே இந்த தகுதியைத்தான் ஒவ்வொரு ஆணும் தம்மிடம் கொண்டு வர வேண்டும். பிறகு ஆண்களுக்கு தந்தை என்ற முறையிலும் பொறுப்பு உள்ளது. அதனையும் புரிந்து கொள்வது அவசியமாகும். பிள்ளைகளுக்கு தர்பிய்யத் கொடுப்பது தாயிற்கு மட்டும்தான் பொறுப்பு என்று நினைத்து விட வேண்டாம். ஒரு குறிப்பிட்ட காலம் வரை ஒரு குழந்தையின் காலம் கண்டிப்பாக தாயுடன்தான் கழிகிறது. மிக மிக சிறு வயதில் தாயின் தர்பிய்யத் குழந்தைகளை பயிற்றுவிப்பதில் முக்கிய பங்கு வகிக்கிறது. ஆனால் இதனால் ஆண் தமது பொறுப்பிலிருந்து விலகியவராக மாட்டார். தந்தையர்களும் கூட குழந்தைகளின் தர்பிய்யத்தில் தம பங்களிப்பை செலுத்த வேண்டும். குறிப்பாக சிறுமிகள் 7–8 வயதிற்குப் பிறகு தந்தையரின் கவனம் செலுத்துதலின் தேவை உடையவராக இருக்கின்றனர். அது அல்லாமல் குறிப்பாக இந்த மேற்கத்திய சூழலில் பிள்ளைகள் தடம்புரள அதிக சாத்தியக்கூறுகள் உள்ளன. இங்கு பெண்களின் தொடர்பாக கூறிய இதே விதிமுறை பொருந்தும். ஆண்களுக்கு – தந்தையருக்கு தமது முன்மாதிரியைக் காட்டவும் நிலைநாட்டவு வேண்டிய தேவை உள்ளது. குழந்தைகளின் நல்லொழுக்கம் சிறந்து விளங்க தந்தையருக்கு பிள்ளைகளில் நல்லொழுக்கத்திற்காக தமது பிள்ளைகளுக்கு கண்ணியமும் மரியாதையும் தர வேண்டியதுள்ள அதே வேளையில் அவர்களை ஆழமாக கண்காணிக்க வேண்டிய அவசியமும் உள்ளது. அதன் மூலம் அவர்கள் சுற்றுச்சூழலின் தீய தாக்கத்திலிருந்து தவிர்ந்து வாழ்வர். பிறகு தந்தையருக்கு பிள்ளைகளுடன் உள்ள தொடர்பு பிள்ளைகளுக்கு ஒரு பாதுகாப்பு உணர்வை ஏற்படுத்துகிறது. அநேக தந்தையர் குழந்தைகளின் நடைமுறையைப் பற்றி புகார் கூறுகிறார்கள். அவர்களுக்கு ஒரு தயக்கம் உருவாகி விட்டது. நம்பிக்கை குறைந்து விட்டது. அல்லது அதிகமாக தவறான விளக்கம் கூறத் தொடங்கி விட்டனர். குழந்தைகள் அதிக நெருக்கமாக இருக்க வேண்டும். அவர்களுடன் தனிப்பட்ட தொடர்பு வைத்திருங்கள் என்று கூறப்பட்டால் பொதுவாகப் பார்க்கப்படுவது என்னவென்றால் குழந்தைகளின் பல பலவீனங்கள் விலகுகின்றன. ஆகவே பிள்ளைகளிடம் வெளியிலுள்ள சூழ்நிலையைப் பற்றிய பாதுகாப்பு உணர்வை ஊட்டுவதற்கு பிள்ளைகளுடன் சிறிது நேரத்தை செலவிடுவது அவசியமாகும்.

பிறகு தந்தையருக்கு இன்னொரு பொறுப்பு உள்ளது. பிள்ளைகளின் தர்பிய்யத்தில் செயல் பயிற்சி தருகின்ற அதே வேளையில் அவர்களுக்காக துஆ செய்வதிலும் கவனம் செலுத்துங்கள். இது மிகவும் அவசியமாகும். மார்க்க ரீதியிலான தர்பிய்யத்தில் கவனம் செலுத்துங்கள். தர்பிய்யத்தின் அசல் பழம் அல்லாஹ்வின் அருளால் ஏற்படுகிறது. ஆனால் மனிதன் தனது முயற்சியை கண்டிப்பாக செய்ய வேண்டும்.

தர்பிய்யத் செய்வதற்கான வழிமுறை, பிள்ளை –களுக்காக துஆ செய்வதற்காக கவனமூட்டியவாறு ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறுகிறார்கள்: ஹிதாயத் மற்றும் உண்மையான தர்பிய்யத் இறைவனது செயலாகும். உண்மையான தர்பிய்யத் அல்லாஹ்வின் பணியாகும். கடுமையாக அவர்களைப் பின்தொடர்வதும், ஒரு விஷயத்தில் பிடிவாதத்துடன் அளவுக்கு மீறி தலையிடுவதும் அதாவது ஒவ்வொரு விஷயத்திலும் பிள்ளைகளை தடுப்பதும் போன்றவை நாமே நேர்வழியின் உரிமையாளர் என்பதை வெளிப்படுத்துவதாகும். நாம் தமது விருப்பத்திற்கேற்ப அவர்களை ஒரு வழியில் கொண்டு வந்து விடுவோம் என்று வெளிப்படுத்துவ –தாகும். இது ஒரு வகை மறைமுகமான ஷிர்க் ஆகும். இதிலிருந்து நம்முடைய ஜமாஅத் விலக வேண்டும்.

அவர்கள் கூறினார்கள்: நாம் நமது பிள்ளை –களுக்காக துஆ செய்கிறோம். மேலோட்டமான முறையில் விதிமுறைகளையும், கல்வியின் பேணுதல்களையும் நடைமுறைப்படுத்த வைக்கிறோம். நமது போதனை என்ன? நாம் பேண வேண்டிய ஒழுங்குமுறை என்ன? என்று சொல்லித் தருகிறோம். அதனை விட அதிகம் இல்லை. பிறகு நாம் முழுமையாக அல்லாஹ்வின் மீதே நம்பிக்கை வைக்கிறோம். எந்த அளவு ஒருவரிடம் நற்பாக்கியத்தின் விதை இருக்குமோ அந்த அளவு அது சரியான சமயத்தில் வளர்ந்து பசுமையாக ஆகி விடும். (மல்ஃபூஸாத் தொகுதி 2 பக்கம் 5; 1985 ஆம் ஆண்டு பதிப்பு - இங்கிலாந்தில் அச்சடிக்கப்பட்டது)

ஆகவே நாம் நினைவில் கொள்ள வேண்டும். ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறுகிறார்கள்: நாம் துஆ செய்கிறோம். பிறகு அந்த துஆவின் தரமும் மிகவும் உயர்ந்தது. அதனை சதாரணமாக கருதக் கூடாது. இந்த துஆவின் இந்த தகுதியை அடைய நாம் மிகவும் உழைக்க வேண்டும். இது சாதாரண விஷயமல்ல. எனவே இதன் பக்கம் தந்தையர் கவனம் செலுத்த வேண்டும்.

தந்தை என்ற முறையில் தமது பிள்ளைகளுக்கு எந்த அளவுக்கு தர்பிய்யத் கொடுக்க வேண்டும் என்பதைப் பற்றி ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் மிகவும் விரிவாக ஓரிடத்தில் கூறுகின் –றார்கள்: சிலரின் எண்ணம் எவ்வாறிருக்கிறது என்றால் பிள்ளைகளுக்காக சிறிது பொருளை விட்டுச் செல்ல வேண்டும். எனக்கு வியப்பு ஏற்படுகிறது. பொருள்களை அவர்களுக்காக விட்டு வைக்க வேண்டும் என்று நினைக்கிறார். ஆனால் பிள்ளைகள் ஸாலிஹ் – நல்லடியாராகவும் தீயவர்களாக இல்லாமலும் இருக்க வேண்டுமே என்று கலைப்பட வேணடும் என்ற எண்ணம் வருவதில்லை. இந்த சிந்தனை கூட வருவதில்லை. அதனை பொருட்படுத்துவதும் இல்லை. சில வேளைகள் பிள்ளைகளுக்காக அத்தகையோர் பொருள்களை சேகரிக்கிறார்கள். பிள்ளைகளின் தகுதிகளைப் பற்றிய சிந்தனையை பொருட்படுத்துவதில்லை. அத்தகையோர் வாழ்நாளிலேயே பிள்ளைகளின் கைகளால் வேதனைக்கு ஆளாகின்றனர். அதன் தீய தாக்கங்களினால் சிக்கலில் மாட்டி விடுகிறார்கள். அவர்கள் தமது பொருளை என்னென்ன வழிகளில் திட்டங்களில் சேகரித்தார்கள் என இறைவனே அறிவான். இறுதியில் அது தீய செயல்களிலும் மது அருந்துவதிலும் செலவழிகிறது. அத்தகைய பிள்ளைகள் தமது பெற்றோர்களின் தீய விஷமங்களுக்கு வாரிசாக ஆகி விடுகின்றனர். சந்ததிகளின் சோதனை மிகப்பெரும் சோதனையாகும். பிள்ளை சாலிஹ் ஆக இருந்தால் எதனை பொருட்படுத்த வேண்டும்?

இறைவனே கூறுகிறான்: வஹுவ யத்தபல்லுஸ் ஸாலிஹீன் – அதாவது அல்லாஹ் நல்லடியார்களுக்கு பொறுப்பேற்றுக் கொள்கிறான். (7:197) அவர்கள் பேரிழந்தவர்களாக இருக்கிறார்கள் என்றால் அவர்களுக்காக இலட்சக்கணக்கான ரூபாய்களை விட்டுச் சென்றாலும் வீணான காரியங்களைச் செய்து அதனை அழித்து விட்டு பிறகு மீண்டும் வெறுமையாகி விடுவர். பிறகு அத்தியாவசியமான பிரச்சனைகளில் மாட்டிக் கொள்வார்கள்.

அவர்கள் கூறுகிறார்கள்: எவர் தனது கருத்தை இறைவனின் கருத்துடன் ஒன்று சேர்த்து பொருத்துகிறார்களோ அவர்கள் சந்ததிகளின் சார்பாக திருப்தி அடைகிறார்கள். அவர்கள் அவர்களின் திறமைக்காக முயற்சியும் துஆவும் செய்ய வேண்டும். இந்நிலையில் அல்லாஹ்வே அவர்களுக்கு

பொறுப்பேற்கிறான். அவரை பராமரித்துக் கொள்வான். அவருக்கு பொறுப்பேற்பவனாவான். அவர்களின் திறமைக்காகவும் முயற்சி செய்ய வேண்டும். அதாவது மிக அதிமாக அவர்களின் தர்பிய்யத்திற்காக முயற்சி செய்ய வேண்டும்.

அவர்கள் கூறுகிறார்கள்: இது ஹஸ்ரத் தாவூது (அலை) அவர்களின் கூற்றாகும். நான் குழந்தையாக இருந்தேன். வாலிபன் ஆனேன். வயோதிகனும் ஆகி விட்டேன். ஓர் இறையச்சமுள்ளவரின் நிலைமையை வாழ்வாதாரமற்றவராகவோ, அவர்களின் சந்ததிகளை பிச்சை எடுப்பவர்களாகவோ ஒருபோதும் நான் கண்டதில்லை. அல்லாஹ் பல தலைமுறை வரை கண்காணித்துக் கொள்கிறான். ஆகவே நீங்கள் நல்லவராக இருங்கள். தமது சந்ததிகளுக்கு ஒரு முன்மாதிரியாக – நன்மைக்கும் இறையச்சத்திற்கும் உயரிய முன்மாதிரியாக ஆகி விடுங்கள். விஷயம் அதுதான். சந்ததிகளை உருவாக்குவதற்காகவும் கூட தமது நிலையையும் இஸ்லாத்தின் போதனைக்கேற்ப அமைக்க வேண்டும். அப்போதுதான் அடுத்த தலைமுறை அந்த வழியில் நடப்பதாகவும் இருக்கும். பெற்றோரின் கண்களுக்கு குளிர்ச்சியாகவும் இருக்கும்.

அவர்கள் கூறுகிறார்கள்: நீங்களும் நல்லவராக இருங்கள். சந்ததிகளுக்கு நன்மைக்கும் இறையச்சத்திற்கும் மிக உயரிய முன்மாதிரியாக இருங்கள். அவர்களை இறையச்சமும் மார்க்க உணர்வும் உள்ளவராக்குவதற்காக முயற்சியும் துஆவும் செய்யுங்கள். பொருளை சேகரிக்க எவ்வளவு முயற்சி செய்கிறீர்களோ அந்த அளவுக்கு இதற்காகவும் முயற்சி செய்யுங்கள். பிள்ளைகளுக்காக மிகச் சிறந்த முன்மாதிரியாகவும் பாடமாகவும் இருக்கக்கூடிய வேலையைச் செய்யுங்கள். அதற்கு முதலில் உங்களை நீங்கள் சீர்திருத்துவது அவசியமாகும். நீங்கள் மிக உயர்தரம் வாய்ந்த இறையச்சம் உடையவர் ஆவீர்கள் எனில் இறைவனை திருப்திப்படுத்துவீர்கள் எனில் அல்லாஹ் உங்களது சந்ததிகளுடனும் நல்ல முறையில் நடந்து கொள்வான் என்று உறுதி கொள்ளப்படுகிறது. (மல்ஃபூஸாத் தொகுதி 8 பக்கம் 108-110; 1985 ஆம் ஆண்டு பதிப்பு - இங்கிலாந்தில் அச்சடிக்கப்பட்டது)

இஸ்லாம் தந்தைகளிடம் உங்கள் பிள்ளைகளுக்கு தர்பிய்யத்தின் பக்கம் கவனம் செலுத்துங்கள் என்று கூறுமிடத்தும் அவர்களுக்காக துஆ செய்யுங்கள் என்று கூறுமிடத்து பிள்ளைகளுக்கும் கட்டளையிடுகிறது. உங்களுக்கும் சில கடமைகள் உள்ளன. நீங்கள் பருவ வயதை அடைந்தால் பெற்றோருக்காக உங்களுக்கும் சில கடமைகள் உள்ளன. அதை நீங்கள் செய்ய வேண்டும். உறவுகளின் கண்ணிகளை ஒன்றுடன் ஒன்று இணைப்பதன் மூலம் அமைதி நிறைந்த சமூகத்தை உருவாக்க முடியும். பெற்றோரின் உரிமையைத் தருவதில் எவ்வளவு பெரிய பொறுப்பு இருக்கிறது? அதற்கு எவ்வளவு முக்கியத்துவம் உள்ளது. இது பற்றி ஒவ்வொரு நம்பிக்கையாளரும் உணர்ந்திருக்க வேண்டும். ஒரு சிறுவன் பருவத்தை அடையும்போது அவன் எவ்வாறு பெற்றோரின் கடமையை நிறைவேற்ற வேண்டும்? இதனைப் புரிய வைத்தவாறு ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் ஒரு சந்தர்ப்பத்தில் வழிகாட்டியுள்ளார்கள்.

ஹஸ்ரத் அப்துல்லாஹ் பின் அம்ர் (ரலி) அவர்களின் ரிவாயத் வருகிறது. ஒரு மனிதர் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுடைய சமூகத்தில், நான் ஜிஹாதிற்குச் செல்ல விரும்புகிறேன் என்று கேட்டார். அதற்கு ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள், உமது பெற்றோர் உயிருடன் இருக்கிறார்களா? என்று கேட்டார்கள். அதற்கு அவர், ஆம், உயிருடன் இருக்கிறார்கள் என்றார். அந்த இருவருக்கும் சேவை செய்யுங்கள். இதுவே உமது ஜிஹாது ஆகும் என்று ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள். (ஸஹீஹ் புகாரி கிதாபுல் ஜிஹாது வஸ்ஸெய்ர் பாபுல் ஜிஹாது பிஇஸ்னி அபவய்ன் ஹதீஹ் 30004)

எனவே பெற்றோருக்கு சேவை செய்வதன் முக்கியத்துவத்தை இதிலிருந்து உணரலாம். இது மட்டுமல்லாமல் ஒருவருக்கொருவர் அன்பைப் பரப்புவதற்காக பெற்றோரின் நண்பர்களுடன் கூட நல்ல முறையில் நடந்து கொள்ளுமாறு ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் வழிகாட்டினார்கள்.

ஒரு சந்தர்ப்பத்தில் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்: மனிதனின் மிகச் சிறந்த நற்செயல் தமது தந்தை மரணமடைந்த நிலையில் தமது பெற்றோரின் நண்பர்களுடன் நல்ல முறையில் நடந்து கொள்வதாகும். (சுனன் அபீ தாவூது கிதாபுல் அதப் பாபுஃபீ பிர்ரில் வாலிதய்னி ஹதீஸ் 5143)

இவ்விஷயத்தை மேலும் விளக்கியவாறு ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறினார்கள். அறிவிப்பில் இவ்வாறு குறிப்பிடப்பட்டுள்ளது. அபூ உஸைத்துல் சஅதி கூறுகிறார்: நாங்கள் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் சமூகத்தில் இருக்கும்போது பனூ சல்மா உடைய ஒரு மனிதர் வந்தார். அவர், அல்லாஹ்வின் தூதர் அவர்களே! பெற்றோரின் மரணத்திற்குப் பிறகும் நான் அவர்களுக்கு செய்யத்தக்க நன்மை ஏதும் உள்ளதா? என்று கேட்டார். அதற்கு ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள், ஆம், ஏனில்லை? அவர்களுக்காக நீர் துஆ செய்யும். அவர்களுக்காக மன்னிப்புக் கேளும். அவர்கள் எவருக்காவது வாக்குறுதி வழங்கி இருந்தால் அதனை நிறைவேற்றும். அவர்களது உறவினர்கள் மற்றும் பிரியத்திற்குரியவர்களிடம் அவர்கள் உயிருள்ள போது எவ்வாறு உறவினைப் பேணி வந்தார்களோ அதேபோன்று பேணி வாரும். அவர்களின் நண்பர்களை மதியுங்கள். அவர்களுடன் மரியாதையுடன் நடந்து கொள்ளுங்கள். (சுனன் அபீ தாவூது கிதாபுல் அதப் பாபுஃபீ பிர்ரில் வாலிதய்னி ஹதீஸ் 5142)

பிறகு ஒரு சந்தர்ப்பத்தில் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறினார்கள்: எவரது வயது நீண்டதாக இருக்க வேண்டும் என்று விரும்புகிறாரோ, எவர் தனது வாழ்வாதாரம் அதிகமாக வேண்டும் என்று விரும்புகிறாரோ அவர் தமது பெற்றோருடன் நல்ல முறையில் நடந்து கொள்ள வேண்டும். உறவுகளைப் பேணும் வழக்கத்தை ஏற்படுத்த வேண்டும். (அல் ஜாமிஉ லிஷுஃபில் ஈமான் தொகுதி 10 பக்கம் 284-285. பாபு பிர்ரில் வாலிதய்ன் ஹதீஸ் 471) ஆகவே, பிள்ளைகளை வெறும் அசட்டையாக இருப்பதற்காக மட்டுமல்ல. மாறாக, பருவ வயதை அடைந்து விட்டால் அவர்களுக்கும் சில பொறுப்புகள் உள்ளன. பெற்றோருக்கும் சில உரிமைகள் உள்ளன. அதனை வழங்க வேண்டும். குறிப்பாக திருமண வேளையில் இந்த கடமைகளின் பக்கம் கவனம் செலுத்த வேண்டும். ஒரு மனிதர் ஞானத்துடன் மனைவியின் கடமையை நிறைவேற்றுகிறார். பெற்றோருக்கும் சேவை செய்கிறார். மனைவியிடமும் ஞானத்துடன் மாமனார் மாமியாரின் முக்கியத்துவத்தை உணர்த்துகிறார். தாமும் கூட மாமனார் மாமியாரின் முக்கியத்துவத்தை அறிகிறார். அந்த வீடுகளில் ஒருபோதும் சண்டைகள் உருவாவதில்லை. சில வேளைகளில் உருவாகின்றன. சில வேளைகளில் கருத்து வேறுபாடு காரணமாக தந்தைக்கும் மகனுக்கும் கருத்து வேறுபாடு உருவாகிறது. சில புதிதாக பைஅத் செய்தவர்கள் இப்போதும் கூட, இந்நிலையில் தந்தையருக்கு அந்த மகன் நல்ல முறையிலும் நடக்கவும் வேண்டியுள்ளது. சேவையும் செய்ய வேண்டியதுள்ளது என்று கேள்வி கேட்கிறார்கள்.

ஒருமுறை பட்டாலாவுக்குச் செல்லும்போது ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள், ஹஸ்ரத் ஷேக் அப்துர் ரஹ்மான் சாஹிப் அவர்களிடம் அவரது தந்தையார் குறித்து கேட்டார்கள். அதற்குப் பிறகு அன்னாருக்கு போதனை வழங்கினார்கள். அவருக்காக துஆ செய்யுங்கள். அவர் அஹ்மதி இல்லை. முஸ்லிம் அல்லாதவர். எல்லா வகையிலும் முடிந்த வரை பெற்றோரின் உள்ளத்திற்கு மகிழ்ச்சியூட்ட வேண்டும். அவர்களிடம் முந்தையை பல ஆயிரம் நல்ல தூய குணங்களைக் காட்டி இஸ்லாத்தின் உண்மையை ஒப்புக் கொள்ள வையுங்கள். நல்லொழுக்கத்தின் முன்மாதிரி எத்தகையது எனில் அதற்கு மற்ற அற்புதங்கள் சமமாக முடியாது. உண்மையான இஸ்லாத்தின் இந்த தகுதியினால் மனிதன் மிக உயர்ந்த நல்லொழுக்கத்தை அடைகிறான். அவன் ஒரு தனிச்சிறப்புமிக்க மனிதன் ஆகிறான். ஒருவேளை அலலாஹ் உம் மூலமாக அவர்களது உள்ளத்தில் இஸ்லாத்தின் மீது அன்பை இடலாம். இஸ்லாம் பெற்றோரின் தொண்டிலிருந்து தடுக்கவில்லை. மார்க்கத்திற்கு ஊறு விளைவிக்காத உலகியல் விவகாரங்களில் எல்லா வகையிலும் அவர்களுக்கு முழுமையாக கட்டுப்பட வேண்டும். உள்ளத்தாலும் உயிராலும் தொண்டு செய்யுங்கள். (மல்ஃபூஸாத் தொகுதி 4 பக்கம் 175; 1985 ஆம் ஆண்டு பதிப்பு - இங்கிலாந்தில் அச்சடிக்கப்பட்டது) ஆகவே, இது தப்லீகின் பொதுவான விதியும் ஆகும். மென்மையான சொற்களையும் நல்லொழுக்கத்தையும் காட்ட வேண்டும் என்பது தப்லீகின் பொதுவிதியாகும்.

பிறகு இன்னொரு சம்பவம். அதனை ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் உண்மைப்படுத்தி –யுள்ளார்கள். இங்கு தந்தையாரும் முஸ்லிம்தான். ஒரு மனிதர், அல்லாஹ்வின் தூதர் அவர்களே! பெற்றோருக்கு கட்டுப்படுவதையும், பணிவிடை செய்வதையும் அல்லாஹ் மனிதனுக்கு கடமையாக்கி –யுள்ளான். ஆனால் நான் ஹுஸூருடைய பைஅத்தில் வந்த காரணத்தால் எனது பெற்றோர் என்னிடம் மிகவும் அதிருப்தி அடைந்துள்ளனர். எனது உருவத்தைக் கூட பார்க்க விரும்பவில்லை. நான் ஹுஸூரிடம் பைஅத் செய்வதற்காக வருவதாக இருந்தேன். அவர்கள் எம்முடன் நீர் கடிதத் தொடர்பு கூட வைக்க வேண்டாம். இப்போது நாங்கள் உமது தோற்றத்தைக் கூட பார்க்க விரும்பவில்லை என்று கூறினர். நான் இறைவனது அக்கட்டளையை எவ்வாறு நிறைவேற்றுவேன்? என்று கேட்டார். அதற்கு ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்: திருக்குர்ஆன் பெற்றோருக்குக் கட்டுப்படுவதற்கும் சேவை செய்வதற்கும் கட்டளையிடுகிற அதே வேளையில் இதனையும் கூறுகிறது.

رَبُّكُمْ اَعْلَمُ بِمَا فِيْ نُفُوْسِكُمْ اِنْ تَكُوْنُوْا صٰلِحِيْنَ فَاِنَّهٗ كَانَ لِلْاَوَّابِيْنَ غَفُوْرًا

அல்லாஹ் உங்கள் உள்ளங்களில் உள்ளதை நன்கறிகிறான். நீங்கள் நல்லவர்களாக இருந்தால், அவன் முன் குனிபவர்களுக்கு அவன் மிகவும் மன்னிப்பை வழங்கக் கூடியவனாவான். **(17:26)**

சஹாபா ரிழ்வானுல்லாஹி அலைஹிமுக்கும் கூட இந்த பிரச்சனைகள் வந்தன. மார்க்க நிர்பந்தத்தின் காரணமாக ெற்றோருடன் பிரிவு ஏற்பட்டு விட்டது. எவ்வாறிருப்பினும், நீர் அவர்களின் நலன் மற்றும் கவனிப்பிற்காக எப்போதும் தயாராக இரும். உமது எண்ணத்தின் நற்கூலி உமக்கு கிடைத்துக் கொண்டிருக்கும். மார்க்கத்திற்காக மட்டும் அல்லாஹ்வின் திருப்திக்கு முன்னுரிமை கொடுத்ததற்காக, பெற்றோரை விட்டு தனித்து விட்டால் அது ஒரு நிர்பந்தமாகும். சீர்திருத்தத்தை கவனத்தில் கொள்ளுங்கள். நிய்யத்தின் ஆரோக்கியத்தைக் கவனத்தில் கொள்ளுங்கள். அவர்களுக்காக துஆ செய்து கொண்டிருங்கள்.

EDITOR
MUZZAMMIL AHMAD
Mobile : + 91 98885-67232
SUB EDITOR
RAFEEQ AHMAD
E-mail : editorbadrtamil@gmail.com
Website : www.akhbarbadrqadian.in
www.alislam.org/badr

REGISTERED WITH THE REGISTRAR OF THE NEWSPAPERS FOR INDIA AT NO PUNTAM/2016/68785

The Weekly BADAR Qadian
பதர் வாரப் பத்திரிகை காதியான்
Distt. Gurdaspur (Pb.) INDIA Qadian - 143516

Postal Reg.No. GDP-39/2017-2019 Vol. 2 Thursday 29 June 2017 Issue No. 26

MANAGER
NAWAB AHMAD
Tel. : +91 1872-224757
Mobile : +91 94170- 20616
E-mail : managerbadrqnd@gmail.com
ANNUAL SUBSCRIPTION : Rs.300/-

இந்த விவகாரம் ஒன்றும் புதிதாக இன்று வரவில்லை. ஹஸ்ரத் இப்ராஹீம் (அலை) அவர்களுக்கும் இதனை சந்திக்க நேர்ந்தது. எவ்வாறிருப்பினும் இறைவனின் உரிமையே முன்னுரிமைக்குரியது. ஆகவே இறைவனுக்கு முன்னுரிமை தாருங்கள். உங்கள் தரப்பிலிருந்து பெற்றோரின் உரிமையை வழங்குவதற்கான முயற்சியில் மூழ்கியிருங்கள். அவர்களின் ஹக்கில் துஆ செய்து கொண்டிருங்கள். நல்லெண்ணம் கொள்ளுங்கள். (மல்ஃபூஸாத் தொகுதி 10 பக்கம் 130-131; 1985 ஆம் ஆண்டு பதிப்பு - இங்கிலாந்தில் அச்சடிக்கப்பட்டது)

ஆகவே, இந்தக் கேள்வியை இக்காலத்திலும், பெற்றோருக்குரிய கடமைகளை இந்நிலையில் நாங்கள் எவ்வாறு நிறைவேற்றுவது? என்று அதிகமானவர்கள் கேட்கின்றனர். அவர்களுக்கு இந்தப் பதில் போதுமானதாகும். எவ்வாறிருப்பினும் பல்வேறு நிலைகளில் ஓர் ஆணுக்கு பல பொறுப்புகள் உள்ளன. அதனை நிறைவேற்ற முயற்சி செய்ய வேண்டும். தமது வீடுகளை அன்பு, நேசம் எப்போதும் நிலைத்திருக்கும் இடமாக ஆக்க முயற்சி செய்ய வேண்டும். ஓர் ஆண் கணவனாகவும் இருக்கிறார். தந்தையாகவும் இருக்கிறார். மகனாகவும் இருக்கிறார். இந்த அடிப்படையில் அவர் தனது பொறுப்புகளைப் புரிய வேண்டும். இன்னும் நிறைய நிலைகள் ஓர் ஆணுக்கு உள்ளன. ஆனால் இந்த மூன்று நிலைபாடுகளை நான் விளக்கினேன். வீட்டின் அடிப்படையான ஒருமைப்பாடு இதுவாகும். இந்த அடிப்படை விஷயத்தில் அமைதியை நிலைநாட்டும்போதுதான் உத்தரவாதம் தர முடியும். இதில் அதிகமாக அழகை உருவாக்க முயற்சி செய்ய வேண்டும். அல்லாஹ் நம் எல்லாருக்கும் அதற்கான நல்வாய்ப்பினை வழங்குவானாக.

★ ★ ★ ★ ★

## ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் உண்மைக்கு ஒரு மகத்தான ஆதாரம்

وَلَوْ تَقَوَّلَ عَلَيْنَا بَعْضَ الْأَقَاوِيلِ ۝ لَأَخَذْنَا مِنْهُ بِالْيَمِينِ ۝ ثُمَّ لَقَطَعْنَا مِنْهُ الْوَتِينَ ۝

அவர் எந்த சொல்லையேனும் பொய்யான வெளிப்பாடாக எம்மீது சுமத்தியிருந்தால் நிச்சயமாக நாம் அவரை எம் வலக்கையால் பிடித்திருப்போம். பிறகு நிச்சயமாக நாம் அவரது உயிர் நாடியைத் துண்டித்திருப்போம். (69:45-47)

அஹ்மதிய்யா முஸ்லிம் ஜமாஅத்தின் தோற்றுனரும் வாக்களிக்கப்பட்ட மஸீஹும் மஹ்தியுமாகிய ஹஸ்ரத் மிர்ஸா குலாம் அஹ்மது காதியானி அலைஹிஸ்ஸலாம் அவர்கள் இஸ்லாத்தின் உண்மை மற்றும் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுடன் தனக்கு இருக்கின்ற ஆன்மீகத் தொடர்பு குறித்து பலமுறை இறைவன் மீது சத்தியம் செய்தவாறு நான் இறைவன் புறமிருந்து அனுப்பப்பட்டுள்ளேன் என்று கூறியுள்ளார்கள். அவர்களது அத்தகைய பெரும்பாலான மேற்கோள்களைத் தொகுத்து, “இறைவன் மீது ஆணையாக” என்ற பெயரில் ஒரு நூல் வெளியிடப்பட்டிருக்கின்றது. இந்த நூலைப் பெற விருப்பமுள்ள சகோதரர்கள் போஸ்ட் கார்டு அல்லது மின்னணு அஞ்சல் (Email) மூலம் தெரியப்படுத்தி அந்த நூலை இலவசமாகப் பெற்றுக் கொள்ளலாம்.

**E-mail: abdulqadir.wahid@gmail.com**
**MOB : 9626445578**
Postal-Address: ABDUL QADIR AHMADIYYA MUSLIM MISSION
No. 3, United India Colony, Frist Main Road, Kodambakkam,
Chennai - 600 024, TAMIL NADU.

(முதல் பக்கத்தின் தொடர்ச்சி...)

முன்னுக்கு கொண்டு செல்வதும் திட நம்பிக்கையேயாகும். திட நம்பிக்கையின் வழியைக் காட்டாத ஒவ்வொரு மதமும் பொய்யானதேயாகும். திட நம்பிக்கையின் வழியாக இறைவனைக் காட்டித்தராத ஒவ்வொரு மதமும் பொய்யானதாகும்.

பழங்கதைகளைத் தவிர வேறு ஒன்றுமில்லாத ஒவ்வொரு மதமும் பொய்யானதேயாகும். இறைவன் முன்பு இருந்தது போலவே இப்போதும் இருந்து வருகின்றான். இதற்கு முன்பு அவனிடம் இருந்த வல்லமைகள் அனைத்தும் இப்போதும் இருந்து வருகின்றன. அடையாளங்களைக் காட்டுவதற்குரிய அதிகாரங்களும், அவனிடம் முன்பு இருந்தது போலவே இப்போதும் இருந்து வருகின்றன. அவ்வாறிருக்க நீங்கள் பழங்கதைகளின் மீது ஏன் திருப்தி கொள்கிறீர்கள் ?

எந்த மதத்தில் பழங்கதைகள் மட்டுமே அதன் தெய்வீக அற்புதங்களாகவும், அதன் முன்னறிவிப்புகளாகவும் இருக்கின்றனவோ அம்மதம் அழிந்து போனதாயிருக்கிறது. எந்த ஜமாஅத் மீது (எக்கூட்டத்தின் மீது) இறைவன் இறங்கவில்லையோ அக்கூட்டம் அழிந்து போனதாகும். மேலும் திட நம்பிக்கையின் வழியாக இறைவனது கரத்தால் தூய்மை அடையாத அந்த ஜமாஅத் (அக்கூட்டம்) அழிந்து போனதாகும். எவ்வாறாக மனிதன் மனஇச்சைகளை உருவாக்கும் பொருட்களைக் கண்டு அவற்றின் பக்கம் ஈர்க்கப்படுகின்றானோ அவ்வாறே மனிதன் ஆன்மீக இன்பங்களைத் திட நம்பிக்கையின் வழியாக அடையும்போது அவன் இறைவன் பக்கம் ஈர்க்கப்படுகிறான். மேலும் இறைவனிடம் அமைந்துள்ள சிறப்புத் தன்மையானவை மற்ற எல்லா பொருட்களும் கழிவுப் பொருட்களாக அவனுக்குத் தோற்றம் அளிக்கும் வகையில் அவனைப் போதை கொள்ளச் செய்து விடுகின்றன. அவன் இறைவனைப் பற்றியும் அவனது மகத்துவம், கம்பீரம், வல்லமை, தீர்ப்பளிக்கும் நாள் ஆகியவை பற்றியும் திட நம்பிக்கையால் அறியும் அதே சமயத்தில் தான் பாவத்திலிருந்து இரட்சிப்பு பெறுகிறான். எல்லா விதமான அச்சமற்ற நிலைக்கும் அடிப்படை காரணம் அறியாமையே ஆகும். இறைவனிடமிருந்து உறுதியான ஞானத்தில் பங்கு பெறும் மனிதன் ஒருபோதும் அச்சமில்லாமல் இருக்க மாட்டான். ஒரு பயங்கரமான வெள்ளப் பெருக்கானது தன் வீட்டை நோக்கி வருவதாகவோ அல்லது அவ்வீட்டின் இறுதி இடமொன்றே எஞ்சி இருப்பதைத் தவிர இதர பாகங்களையெல்லாம் நெருப்பு பிடித்து எரிவதாகவோ அறிந்த அவ்வீட்டின் உரிமையாளன் அவ்வீட்டில் ஒருபோதும் தங்கியிருக்க மாட்டான்.

இவ்வாறிருக்க நீங்கள் இறைவனின் தீர்ப்பளிக்கும் இறுதி நாள் மீது திட நம்பிக்கை கொண்டவர்களாக வாதம் புரிந்து கொண்டு அதே சமயம் உங்களது அபாயகரமான நிலையிலிருந்து மீண்டு வராமல் அதிலேயே எப்படி நிலை கொண்டிருக்கிறீர்கள் ?

ஆகவே நீங்கள் உங்கள் கண்களைத் திறங்கள். முழு உலகிலும் காணப்படுகின்ற அத்தெய்வீக சட்டங்களை பாருங்கள். கீழ்நோக்கிச் செல்கின்ற எலிகளைப்போல் ஆகாதீர்கள். மாறாக வானவெளியை தனக்காக விரும்பி உயரப் பறக்கும் புறாவைப் போல் ஆகுங்கள். நீங்கள் பைஅத் என்னும் உடன்படிக்கை மூலம் தவ்பா (பாவமன்னிப்பு) கோரிய பின்னரும் அப்பாவத்திலேயே நிலை கொள்ளாதீர்கள். பாம்பு தனது சட்டையை கழற்றி எறிந்து விட்ட பின்னரும் பாம்பாகவே இருப்பதுபோல் நீங்களும் ஆகாதீர்கள். உங்களை நெருங்கிக் கொண்டிருக்கும் மரணத்தை நினைவு கூறுங்கள். ஆனால் நீங்களோ இதனை அறியாதவர்களாக இருக்கிறீர்கள். நீங்கள் பரிசுத்தவான்களாக ஆவதற்கு முயற்சியுங்கள். மனிதன் தானாக பரிசுத்தமான பின்னரே பரிசுத்தத்தை பெறுகிறான். இருப்பினும் நீங்கள் இந்த அருட்கொடையை எவ்வாறு பெறுவீர்கள் ? இதன் விடையை இறைவனே திருக்குர்ஆனில் அளித்துள்ளான். وَاسْتَعِينُوا بِالصَّبْرِ وَالصَّلٰوةِ அதாவது தொழுகையைக் கொண்டும் பொறுமையைக் கொண்டும் இறைவனிடம் உதவி தேடுங்கள். *(2:46)*

(கிஷ்தி நூஹ். ரூஹானீ கஸாயின் தொகுதி *19* பக்கம் *66-69*)

Printed & Published by: Jameel Ahmed Nasir on behalf of Nigran Board of Badar. Name of Owner: Nigran Board of Badar. And Printed at Fazle-Umar Printing Press. Harchowal Road, Qadian, Distt. Gurdaspur-143516, Punjab. And published at office of the Weekly Badar Mohallah - Ahmadiyya, Qadian, Distt. Gsp-143516, Punjab. India. Editor: Muzzammil Ahmad